
# ஆத்ம ஜோதி



தெரியும் மறை வல்லான் திருக்கேதீச்சரத்தான்.



# ஆத்ம ஜோதி

[ஓர் ஆத்மீக மாத வெளியீடு]


எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

- சுத்தானந்தர்


ஜோதி 16 ‡ சோபகிருது௵ பங்குனிமீ 1௨ [14-3-64] ‡ சுடர் 5


## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | கேதீச்சரநாதன் | 153 |
| 2 | கடமை | 154 |
| 3 | ஈழத்துச் சைவர்களின் கடன் | 155 |
| 4 | திருக்கேதீச்சரத்தில் சாதனையும் திருவாசக விழாவும் | 157 |
| 5 | ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் | 162 |
| 6 | தோத்திரங்கள் தியானத்திற்கு வழி காட்டுகின்றன. | 164 |
| 7 | மணிவாசகர் கண்ட மனித வளர்ச்சி | 166 |
| 8 | திருவாசகத் தேன் | 168 |
| 9 | திருவெம்பாவை - அதன் தத்துவம் | 170 |
| 10 | திருவாசகம் விழிப்புணர்ச்சியைத் தருவது. | 172 |
| 11 | பாவை பாடிய வாயால் இறைவன் விருப்புக்கு கோவை பாடிய செம்மல் | 174 |
| 12 | பெரியார்கள் காட்டும் வழி | 179 |
| 13 | சிவநெறி | 182 |
| 14 | மாணிக்கவாசகர் பள்ளியில் படியாத மாபெரும் விஞ்ஞானியாவார். | 186 |
| 15 | திருவாசகத் தேன் மருந்து! | 192 |



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள் சந்தா ரூபா 75.00 வருட சந்தா ரூபா 3.00
தனிப்பிரதி சதம் 30
கௌரவ ஆசிரியர் — திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் — திரு. நா. முத்தையா
''ஆத்மஜோதி நிலையம்'' நாவலப்பிட்டி. [சிலோன்]
தொலைபேசி எண் 353


## கேதீச்சரநாதன்

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல் லுலகினி லுயிர் வாழ்க்கை
கண்ட நாதனுர் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய்கே தீச்சர மது தானே.

ஜனகாதி முனிவர்கள் நால்வரும் நான்கு வேதம் ஆறங்கம் பதினெண் புராணம் முதலான யாவும் கற்று முடிந்த பின், தாம் கற்ற கல்வியின் பயன் யாது? என்று ஆய்ந்தனர். விடை புலப்படவில்லை. அவர்களுக்கு உணர்த்தத் தக்கவர்களுமில்லை. இறைவனுரிடம் நேராகச் சென்றனர். இறைவனுர் வாய் திறந்து யாதுமே பேசவில்லை. கல்லால விருட்ச நீழலிலே தெற்கு நோக்கி இருந்தருளினுர். குருவாக அமைந்தவர் இளவயதினர். சீடர்கள் வயது முதிர்ந்தவர்கள். இருந்தபடி இருந்து காட்டினுர் இறைவர். குரு வாய் திறவாமலே சீடர் உணர்ந்து கொண்டனர். அதுவே அவர்கள் கற்ற கல்வியின் பயன். தாம் கற்ற அறிவினுல் பேரின்பம் அநுபவித்தனர். நால்வருக்கும் உபதேசியாமல் உபதேசித்த அறத்தையே, ஆன்மகோடிகள் அத்தனையும் பெற்று அநுபவிக்க வேண்டும் என்பதே இறைவனுரது எண்ணமாகும். ஆன்மகோடிகள் அத்தனையும் அவ்வறத்தினை உணரவேண்டும் என்ற கருணையினுலேயே இறைவர் திருக்கேதீச்சரத்தில் கோயில் கொண்டருளியிருக்கின்ருர் என்பது திருஞான சம்பந்தப் பெருமானுருடைய கருத்தாகும். வண்டுகள் கீதங்களைப் பாடுகின்றன. பூஞ்சோலைகளில் மயில்கள் கூத்தாடுகின்றன. மாதோட்டத்திலுள்ள அடியார்கள் நாடோறும்கோயில்சென்றுவழிபாடாற்றுகின்றனர். அடியார்களுடைய தோத்திரத்திற்கும்வேண்டுதலுக்கும் மனமிரங்கிய பெருமானுர் அடியார்களுக்குத் திருவருள் சொரிந்த வண்ணமே இருக்கின்ருர். அத்தகைய திருக்கேதீச்சரப் பெருமானை நாமும் வாழ்த்தி வணங்கி உய்வோமாக.

## கடமை

பிறர் கடமையை நன்கு செய்வதினும் தன் கடமையை அரைகுறையாகச் செய்யினும் பாதகமில்லை. அதுவே நல்லது.

— **வேதம்.**

கடமையைச் செய்பவனே பூரணம் அடைகின்றான்.

— **பகவத் கீதை.**

கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற் கொள்பவர்க்கு.

— **வள்ளுவர்.**

வெற்றியை விட்டுக் கடமையையே முதன்மையாகக் கொண்டால் அது சால்பு தருமன்றோ? செய்யவேண்டிய கடமை சேய்மையில் இல்லை. அணித்தே உளது.

— **கன்பூஷியசு.**

செய்ய வேண்டிய கடமை அண்மையில் இருக்க மக்கள் சேய்மையிலேயே தேடுகின்றனர்.

— **ஷின்டோ மதம்.**

எல்லோரிடமும் நட்புக் கொள்க. அதுவே உன் இயல்பு. அவரை அறநெறியில் நிற்கச் செய்க. அதுவே உன் அறிவு. அவரை உன்னைப் போலவே கருதுக. அதுவே உன் மதம். அவரால் இன்பம் அடைவாய். அதுவே உன் ஆன்மா.

— **ஜாரதுஷ்டிரர் வாக்கு.**

கடவுளை அஞ்சி அவர் கட்டளைகளை நிறைவேற்றுவாய். இதில் மனிதனுடைய கடமை முழுவதும் அடங்கும். இம்மையில் கடமை செய்வோர் மறுமையில் கதி அடைவார்.

— **எபிரேய மதம்.**

மனிதன் உரிமையை இழக்கச் சம்மதிக்கலாம். கடமையை நிறைவேற்றாதிருத்தலாகாது.

— **காந்தி.**



## ஈழத்துச் சைவர்களின் கடன்

(ஆசிரியர்)

ஈழத்துச் சைவர்களின் பெருமைக்குக் காரணம் ஈழத்திலுள்ள திருத்தலங்களாகும். அவற்றுள் மிக முக்கிய சிவாலயங்கள் இரண்டு. ஒன்று கோணேஸ்வரம். அடுத்தது கேதீச்சரமாகும். சம்பந்தப் பெருமானும் சுந்தர மூர்த்தி நாயனாரும் தாம் பெற்ற அநுபூதி நிலையில் திருக்கேதீச்சரத்தைப் பாடியிருக்கின்றனர். அப்பெருமை தேவாரத்தோடு மாத்திரம் நின்று விடாது சைவமக்களின் செயலிலும் தோன்றுவதற்குத் தகுந்த சந்தர்ப்பம் ஒன்று வாய்த்துள்ளது.

திருக்கேதீச்சரம் இந்தியாவில் உள்ள ஒரு தலம் என்று நினைத்திருந்த சைவர்களுடைய உள்ளத்தில், அது ஈழநாட்டில் உள்ளது என்ற பதிவு ஏற்படச் செய்த பெருமை திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபையினரின் தொண்டுகளில் முக்கியமான தொன்றாகும். திருக்கேதீச்சரப் பணி நிறைவேறுவதற்கு இன்னும் இரண்டுலட்சம் ரூபாய் தேவையென்று சபையினர் கேட்டுள்ளனர். இருபது லட்சம் சைவப் பெருமக்கள் வாழும் ஈழத்தில் இரண்டு லட்சம் ரூபாய் சேர்வது பெரிய காரியமல்ல. ஒரு சைவப் பெருமகன் பத்துச் சதம் கொடுத்தால் ஒரு மணித்தியாலத்தில் இரண்டு லட்சம் ரூபாய் சேர்ந்து விடுமே.

சைவப் பெருமக்களுடைய உள்ளத்திலே இத் திருப்பணியின் முக்கியத்துவம் இன்னும் புகவில்லை என்றுதான் சொல்லத் தோன்றுகின்றது. இருபது லட்சம் சைவப் பெருமக்களில் இரண்டுலட்சம் சைவர்கள் ஆளுக்கு ஒரு ரூபா கொடுத்தால் நாளைக்குத் திருப்பணி நிறைவேறி விடுமே. ஒரு லட்சம் பேர் ஆளுக்கு இரண்டு ரூபாய் கொடுத்தால் இன்னும் இலகுவில் குறிப்பிட்ட இலக்கை அடைந்து விடலாமே. ஆளுக்குப் பத்து ரூபா வீதம் இருபதினாயிரம் சைவப் பெருமக்கள் கொடுத்தால் இன்னும் மிக இலகுவாகி விடுமல்லவா? பத்து ரூபாவை இறைவன் திருப்பணிக்கென பக்திஉள்ளத்தோடுகொடுக்கும் இருபதினாயிரம்சைவப் பெருமக்கள் இல்லையா? இருக்கவே இருக்கின்றார்கள். அவர்களை ஒன்று சேர்த்தல்தான் தொண்டர்களின் முக்கிய கடமையாகும். இரண்டாயிரம் தொண்டர்கள் முன்வந்து

ஆளுக்குப் பத்துப் பேரைச் சேர்க்கும் பணியில் ஈடுபட்டால் இப்பணி மிக இலகுவாகிவிடும்.

நல்ல உள்ளம் படைத்த எத்தனையோ ஆயிரக்கணக்கான சைவப்பெருமக்கள் இருக்கவே இருக்கின்றார்கள். வலது கை கொடுப்பது இடதுகையறியாமலே வாரி வழங்கும் வள்ளல்கள் இருக்கின்றார்கள். யாராவது ஒருவர் வந்து கேட்குமுன் தாமாக உணர்ந்து கொடுக்கும் வழக்கம் மாத்திரம் தான் பழக்கத்தில் இல்லை. ஆகவேதான் இரண்டாயிரம் தொண்டர்கள் தேவை என்று எழுதினேன்.

திருக்கேதீச்சரம் போன்ற திருக்கோயில் திருப்பணியில் பங்குபெறும் வாய்ப்பு எல்லாருக்கும் எல்லாக்காலத்திலும் கிடைப்பதில்லை. திருக்கேதீச்சரத் திருப்பணியில் பங்குபெறும் சூழ்நிலையிலுள்ள காலத்தில் வசிப்பதே எமது மனிதப் பிறவியின் பெரும் பேறாகும். அப்பேறுடைய காலத்திலே நாம் வாழ்ந்தும் எம்மை அதற்குப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் நாம் பிறந்தும் பிறவாதவர்கள் ஆகின்றோம்.

இக்கட்டுரையை வாசிக்கும் ஒவ்வொரு சைவப் பெருமகனும், ஒருநூறுரூபாயாவது இத்திருப்பணிக்கெனச் சேர்த்துக் கொடுக்கும் கைங்கரியத்திலீடுபடுவதோடு மற்றவர்களையும் ஈடுபடச் செய்து இப்பெருஞ் சிவபுண்ணியத்தில் பங்குபெறுதல் மூலம் தமது பிறப்பை பயனுள்ளதாக்கிக் கொள்வார்களாக. திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபையினருடன் தொடர்பு கொண்டு உடனே தமது பங்கினை அளிக்குமாறு வேண்டுகிறோம்.

எந்நாட்டவர்க்கும் இறைவனான எம்பெருமான் திருக்கேதீச்சரத்தில் விசேடமாக உறைதலால் எமது இறைவராகின்றார். அவரது திருக்கோயில் திருப்பணியில் பங்கு கொள்ள வேண்டியது எமது கடனல்லவா?

---

“தீமையை எதிர்க்காதே'' என்னும் கிறிஸ்தவ வேத வாக்கியத்திற்கு ''தீமையைத் தீமையால் எதிர்க்காமல் நன்மையால் எதிர்க்க வேண்டும்'' என்பதே பொருள்.

— காந்தி வாக்கு



# திருக்கேதீச்சரத்தில் சாதனையும் திருவாசக விழாவும்

—( மு. சிவராசா. )—

அன்று மார்கழி மாதம் ஆறும் நாள், அதிகாலை, திருவெம்பாவை ஆரம்பமாகும் நன்னாள். பிரம்ம முகூர்த்தம் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் நேரம். திருக்கேதீச்சரநாதர் ஆலயத்தின் மணி ''ஓம் ஓம்'' எனும் ஓசையைப் பரப்பி அமைதியாயிருந்த சுற்றுடலை நாத அலைகளால் நிரப்பிக் கொண்டிருந்தது. புனிதபாலாவியில் நீராடி வரும் பக்தர்கள் சிலர், ஆலயத்தின் தென்மேற்கு மூலையிலுள்ள திருவாசக மடத்தை அடைவதற்கும், ஆலயத்தின் ஆயத்த மணி ஓசை அடங்குவதற்கும், சரியாக இருந்தது. மணியின் ஒலி நின்றிருந்தாலும் மணிக்கூண்டுக் கோபுர உச்சியிலிருந்து மயில்கள் இரண்டு இடையிடையே தம் அகவலால் பகலவனை அழைத்துக்கொண்டிருந்தன.

திருவாசக மடத்தில் நின்ற அடியார்கள் மடாலயத்துப் பூசை மேடையில் நால்வர் பெருமக்களுடன் கூடியிருக்கும் நடராசப் பெருமான் சந்நிதியில் குத்துவிளக்கேற்றி கும்பம் வைத்து நவதானியங்கள் விதைத்து பூவும் நீரும் கொண்டு எம்பெருமானைப் பூசித்தனர். தொடர்ந்து அடியார் ஒருவர் ''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை'' பாட உடனிருந்தோர் திரும்பச் சொல்லுகின்றனர். சங்கு, மணி சகிதம் அடியார் கூட்டம் திருமடத்திலிருந்து புறப்படுகிறது. திருவெம்பாவை பாராயணம் பண்ணிக்கொண்டே ஆலய வீதிகளையும் பாலாவிக்கரையையும் சுற்றி வந்து கேதீச்சர நாதர் சந்நிதியை அடையும் போது, ஆலயத்தில் திருவனந்தற் பூசை தொடங்குகிறது. வந்த பக்தர்கள் திருவனந்தலையும், தொடர்ந்து நடைபெறும் திருவெம்பாவை காலசந்திப் பூசைகளையும் தரிசித்தும் குருகுல மாணவர்களின் வேதபாராயணத்தைச் செவிவாய்ப் பருகியும் உளம் நெகிழ்ந்து நிற்கின்றனர். தம்மை மறந்து தியானத்தில் ஈடுபட்ட அவ்வடியார்கள் இறைவன் பிரசாதம் பெற்றுத் திரும்புகின்றனர்.

மீண்டும் திருவாசக மடத்தில் காலை ஒன்பது மணிக்குக் கூடும் அடியார்கள் திருவாதவூரடிகள் புராணபடனம்

கேட்பதற்குப் பேரவாவுடையர். ஏட்டுக்குப் பத்திர புஷ்பங்கள் தூவி அருச்சித்துத் தூப தீபம் காட்டி வணங்கி பூசை மேடையிலிருந்து அதனை மண்டபத்திற்குக் கொண்டு வருகின்றனர். சித்தாந்தச் செம்மல் வைத்தியர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள், கிழக்கு நோக்கிப் பத்மாசனத்தில் இருக்க அவர் வலப்பக்கத்திலே ஏட்டைக் கையிலேந்தியபடி சேர். க. வைத்தியநாதன் அவர்கள் வடக்கு நோக்கி இருக்கிறார்கள்.

''திருச் சிற்றம்பலம். பவளமால் வரையில் நிலவெறிப்பது போல்...... காப்பை எல்லோரும் பாராயணம் செய்த பின் திரு. வைத்தியநாதன் அவர்கள் புராணம் வாசிக்க, வைத்தியர் கணபதிப்பிள்ளை அவர்கள் பயன் சொல்ல, புராணபடனம் ஆரம்பிக்கிறது. புராணபடனத்தைத் தொடர்ந்து எண்பது வயது நிறைந்த, சிவப்பழமாய்ப் பொலியும் தாமோதரம் பிள்ளை சுவாமிகளின் இனிய கண்டத்திலிருந்து புறப்படும் திருவாசகத்தேன் அடியார்கள் செவிவழிப் பாய்ந்து நெஞ்சை நிறைக்கிறது. அதன் பின்னர் அறிஞர் சிலரின் நல்லுபதேசம்.

நண்பகலில் ஆலயத்தில் உச்சிக்காலப் பூசையைத் தரிசித்த அடியார்கள் திருவாசக மடத்தில் மகேசுர பூசையில் கலந்து கொள்ளுகின்றனர். பிற்பகலில் கூட்டுவழிபாடு ஆலய தரிசனம், திருவாசக பாராயணம் விரிவுரைகள் கருத்தரங்குகள் ஆகியவை அடியவர்களின் ஐம்புலன்களுக்கும் விருந்தாய் வந்து அவர்தம் பிறவிப் பிணிக்கு மருந்தாய் அமைகின்றன. இரவு உணவு கொண்டு துயிலச் சென்ற அடியார்கள் மறுநாள் பிரம்ம முகூர்த்தத்தில் நீராடிப் பாவை பாடி முதனாள் போலவே சாதனையில் ஈடுபடுகின்றனர். இப்படிக் கழிந்த நாட்கள் ஆறு.

ஏழாம் நாள், வெள்ளிக்கிழமை வழமைபோல் பாவை பாடி, திருவாசகம் ஓதி கேதீச்சரநாதர் தரிசனமும் பிரசாதமும் பெற்ற அன்பர்கள் காலை ஒன்பது மணிக்குத் திருவாசக மடத்தில் கூடுகிறார்கள். புராண படனத்தைத் தொடர்ந்து திருக்கோணமலை தொண்டர் கந்தையா அவர்கள் தேனொத்த தீங்குரலில் இறைவன் நாமத்தை இழைக்க, பாகொத்த உள்ளத்தோடு அதனைப் பயின்றனர் மெய்யடியார்கள். நாம பஜனையால் உளமுருகி நின்ற பக்தர்களுக்குத் திருவாசக அமுதூட்டிமெய்ம்மறக்கச்செய்தார் திரு க. ஆறுமுகம்அவர்கள். தொடர்ந்து தியானம்... திருவாசக விழாவின் முதல்நாள்



காலை நிகழ்ச்சிகளுக்குச் சிந்தாந்தச் செம்மல் வைத்தியர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார்கள். தத்துவக்கருத்துக்கள் பலவற்றைக் கேட்போர் மனத்தில் பதியவைத்தார் தலைவர். பின்னர் விரிவுரை நிகழ்த்திய 'ஆத்மஜோதி' ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் திருவாசகப்பெருமை பேச, வித்துவான் பொன் அ. கனகசபை அவர்கள் திருவெம்பாவையின் உட்பொருள்பல உரைத்தார்கள்.

மாலை நிகழ்ச்சிகள் கொழும்பு விவேகானந்தசபை, கதிர்காமயாத்திரிகர் தொண்டர் சபை ஆகியவற்றின் தலைவர் திரு. இரா. சபாநாயகம் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயின. கூட்டு வழிபாட்டின் பின்னர் 'எட்டினோடு இரண்டும் அறியாத என்னைப் பட்டி மண்டபம் ஏற்றினை' என்பதற்கு விளக்கம் தந்து மக்கள் ஆன்மவளர்ச்சிக்குப் பாடுபடவேண்டிய அவசியத்தையும்எடுத்துரைத்தார்கள். விரிவுரை ஆற்றிய பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அமுத மழையாய்ப் பொழிந்தார்கள். சாயரட்சைப் பூசைக்குப்பின் சைவப்புலவர் திரு. த. குமாரசாமிப்பிள்ளை அவர்களின் கதாப்பிரசங்கம், திரு. வே. சிவஞானம் அவர்களது வயிலினும் திரு. நா.ஆறுமுகம்பிள்ளை அவர்களின் மிருதங்கமும் திரு.மணி அவர்களின் கெஞ்சிராவும் உதவியாக நடைபெற்றன. தொடர்ந்து சங்கீத பூஷணம் செல்வி ஜெயலட்சுமி சதாசிவம் அவர்கள் பக்கவாத்திய சகிதம் அளித்த இன்னிசை விருந்துடன் முதல்நாள் நிகழ்ச்சிகள் நிறைவேறின.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் விரிவுரையுடன் . ஆரம்பமாயின. புராணபடனத்தின்பின்னர் திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் சிவநேயச்செல்வர் திரு, சி. இ. சதாசிவம்பிள்ளை அவர்கள் ஆக்கிய ''திருக்கேதீச்சரநாதர் கிள்ளை விடுதூது'' என்னும் நூல் அரங்கேற்றப்பட்டது. அன்பர் பலர் நூற்சிறப்பைப் பன்னிப்பன்னிப்போற்ற, ஆக்கியோன் இறைவன் கருணைக்கும் அடியார்கள் ஆசிக்கும் பாத்திரனாகும்பேற்றை எண்ணி உளம் உருகினார்கள். மாலையில் திரு. கி. இலக்குமணன் எம். ஏ. அவர்களின் தலைமையில் திரு. ஆ. கந்தையா எம். ஏ, வித்துவான் ச. கந்தசாமி ஆகியோர் ஆற்றிய விரிவுரைகளும் திரு. வி. க. ஆறுமுகம் அவர்களின் கதாப்பிரசங்கமும் அறிவுக்கு விருந்தாய் அமைந்தன.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமைகாலையில் புராணபடனத்தின் பின்னர் மேன்மைதங்கிய போபந்தர் மகாராஜா அவர்கள் திருவாசகமடத்துக்கு வருகைதந்து சிறப்பித்தார்கள். காலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமைதாங்கிய மாவட்டநீதிபதி திரு. வே. க. கந்தசாமி அவர்கள் வரவேற்புரை கூறினார்கள். சிவானந்தகுருகுல மாணவரின் வேதபாராயணமும் திரு. வே. சிவஞானம் அவர்களின் திருவாசக பாராயணமும் மகாராஜாவையும் மற்றும் உள்ளோரையும் பக்தி வலையிற் படுத்தின. மகாராஜா அவர்கள் தமதுரையில் வாழ்வாகிய ஆற்றுக்குச் சமயமாகிய கரைகள் வேண்டுமென்றும், கரையற்ற ஆறுபோல் சமய ஒழுக்கமில்லாத வாழ்வு ஆக்கத்திற்குப் பதில் அழிவையே பெருக்கும் என்றும் குறிப்பிட்டார்கள். பின்னர் தலைமை உரையைத் தொடர்ந்து திருவாசக ஆய்வு நடைபெற்றது. திருவாசகத்தில் 'தத்துவம்' பற்றி திரு. கி. இலக்குமணன் அவர்களும் ''காலம்'' பற்றி, திரு. செ. தனபாலசிங்கன் (பீ.ஏ.) அவர்களும் 'பக்தி' பற்றி திரு. ஆ. கந்தையா அவர்களும் பேச, 'விஞ்ஞானம்' பற்றி பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் அவர்கள் எழுதியனுப்பிய கட்டுரை வாசிக்கப்பட்டது. காலை நிகழ்ச்சிகள் யாவும் சிந்தனைச் செல்வங்களாக மிளிர்ந்தன.

மாலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கிய சேர். கு. வைத்தியநாதன் அவர்கள், "இவ் வருடத் திருவெம்பாவை நாட்களில் கேதீச்சரத்தில் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் ''சாதனை'' என்ற பெயரில் பக்தி யோகமும், கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தினர் ''சிரமதானம்'' என்றபெயரில்கர்மயோகமும்செய்ய, இவைகளில்பங்கு கொள்ளும் பேறு கிடைத்தமைக்கு என்ன புண்ணியம் செய்தேனோ!' என்று மகிழ்ந்தார்கள். விரிவுரை ஆற்றிய பண்டிதர் மு. ஆறுமுகன் அவர்களும் திரு. மு. சோமசுந்தரம் அவர்களும் அரிய பல கருத்துக்களைக் கூறினார்கள். ஆலயத்தில் சாயரட்சைப் பூசையைத் தரிசித்துத் திரும்பிய அடியவர்களுக்கு ஸ்ரீமதி நாராயணசாஸ்திரி அவர்களின் இசை மகிழ்வூட்ட திரு. கி. இலக்குமணன் அவர்கள் திருவாசகத் தெள்ளமுதை அள்ளிச் சொரிந்தார்கள். பின்னர் சங்கீத பூஷணம், கு. சந்திரபாலன் அவர்கள் பக்கவாத்திய சகிதம் நடாத்திய இன்னிசைக்கச்சேரி மக்களுக்கு மனநிறைவை நல்கியது. செயலாளரின் நன்றியுரையுடன் சாதனையும் திருவாசக விழாவும் இனிது நிறைவேறின.



ஒன்பது நாட்களிலும் பக்தர்கள் பண்ணிய தவத்தின் புண்ணியமே போல மறுநாள் அதிகாலை அவர்களுக்குக் கிடைத்தது ஆனந்த தாண்டவரின் ஆருத்திரா தெரிசனை. அந்த அருட் பிரசாதத்தைப் பெறுதற்கு இதுபோல் எத்தனை காலம் வேண்டுமானாலும் சாதனை செய்யலாமே என்ற உள்ளப் பூரிப்போடு பக்தர் குழாம் பக்திக் கடலில் முழுகியும், பாலாவியில் குளித்தும் 'என்றும் வேண்டும் இந்த இன்பம்' எனக் கேதீச்சரநாதன் பொன்னடி போற்றி மகிழ்ந்தனர்.

## நீர்ப் பரீட்சை!

(டாக்டர். ச. ஆறுமுகநாதன்)

நோயுற்றோர் சிறுநீரைக் காலைப் போதில்
நுட்பமுடன் வெண்புட்டி தனிலே வாங்கி
காய்கின்ற காலைவெய்யில் தனிலே வைத்து
கவனமுடன் குலுக்கிஎள்ளின் எண்ணெய் விட்டு
நோயதனைக் கண்டிடுவீர் எள்ளின் எண்ணெய்
நுண்கம்பி போலிறங்கின் வாத ரோகம்
தூய எண்ணெய் சிறுநீரில் சிதறி காணில்
துலங்கு பித்தம் அதுவாகும், இன்னும் கேளீர்!

கபரோகம் கண்டோர்கள் நீரில் எண்ணெய்
காண்பதற்கு சல்லடைக்கண் போலே தோற்றும்
தபத்தென படராது ஊற்றும் எண்ணெய்
தளர்வாகப் படர்வதுவே சாத்திய மாகும்.
குபுகுபென படருவதும் நீருக் குள்ளே
கொட்டும் எண்ணெய் அழுந்தலோடு கலந்துநிற்றல்
அபத்தமதாய் துளிதுளியாய் சிதறி காணல்
ஆகாது அசாத்தியமென்றே அறிந்து கொள்வீர்!

# ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம்

பதினேழு ஆண்டுகளுக்கு முன் திருக்கேதீச்சரத்தில் முதன் முதலாக பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டிக் கேதீச்சர ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்ய வேண்டுமென்னும் எண்ணத்தை இலங்கைவாழ் சைவ மக்கள் மனத்தில் பதிய வைத்தது ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம். அப்போது அதன் தலைவராக இருந்த ஸ்ரீ க. கனகரத்தினம் ஐயா அவர்களும் இணைச் செயலாளர்களாக இருந்த ஸ்ரீ செல்லப்பாச் சுவாமி, ஸ்ரீ சரவணமுத்துசுவாமி ஆகியோரும் பெரு முயற்சி செய்தனர்.

நாளடைவில் ஆலயப் புனருத்தாரணத்துக்கென தனியானதொரு சபை ஏற்பட்டதும், இத் தொண்டை அதனிடம் ஒப்படைத்துவிட்டு ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் பிற பணிகளில் ஈடுபட்டனர். அருட்பாடல்களைத் திரட்டி அவ்வப்போது இலவச வெளியீடுகளாக்கி மக்கள் கைகளிலும் வாய்களிலும் அவற்றை மணக்கச் செய்தனர். திருக்கேதீச்சரத்தில் அமைந்திருக்கும் திருவாசக மடம் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் ஆக்கிய முக்கிய பணிகளுள் ஒன்றாக விளங்கி வருகிறது.

இந்த மடத்தில் சாதுக்களுக்கும் யாத்ரீகர்களுக்கும் உணவு, உறையுள் வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. விசேட காலங்களில் பிரார்த்தனை, சொற்பொழிவுகள், புராணபடனங்கள் ஆதியனவும் நடைபெறுகின்றன. திருவெம்பாவை நாட்களில் சாதனையும் திருவாசக விழாவும் நடைபெற்று வருகின்றன. இந்நாட்களில் சாதனையில் பங்கு பற்றுவோர் யாவருக்கும் மடத்தில் உணவு வசதிகளும், தங்குவதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன.

சுபகாரியங்களுக்கு விலக்கப்பட்ட மாதம் மார்கழி. ஆனால் இறை வழிபாட்டுக்கு மிக மிக இசைந்த மாதம் இதுவே. சைவ ஆலயங்கள் யாவற்றிலும் மார்கழி மாத முழுவதும் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. ''மாதங்களிலே நான் மார்கழியாக இருக்கிறேன்'' என்கிறார் பகவான். இத்துணைப் பெருமை வாய்ந்த மார்கழியில் வருவது திருவெம்பாவை. இந்நாட்கள் பத்திலும்



சிதம்பரத்தில் உற்சவம் நடைபெறுகிறது. சிதம்பரத்தில் மட்டுமென்ன! சிவனுறைபதிகள் எங்குமே உற்சவந்தான்! ஈழத்திலே சின்னஞ்சிறு கோவில்களில் கூட இந் நாட்களில் விசேட பூசை நடைபெறும்.

தேவாரப் பாடல்பெற்ற சிவஸ்தலமாகிய திருக்கேதீச்சரத்தில் இந்நாட்களில் இறைவழிபாடு செய்வதால் மனத் தூய்மையும், பக்தியும் பெருகும் என்பது அநுபவசாலிகள் கண்ட உண்மை. சிவபக்தர்கள் யாவரும் இந்தப் பேரானந்தத்தில் திளைக்க வேண்டும் என்னும் எண்ணத்தில் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் சென்றவருடம் திருவெம்பாவை நாட்களில் ஆறு நாட்கள் சாதனையும் மூன்று நாட்கள் திருவாசகவிழாவும் நடைபெற ஒழுங்குகள்செய்தது. இந்நிகழ்ச்சிகள் அடியார்கள் மனதைப் பெரிதும் கவர்ந்ததாலும், மெய்யடியார்கள் பலர் இக் கைங்கரியத்தைத் தொடர்ந்து செய்ய வேண்டுமெனப் பணித்தமையாலும் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் இவ்வருடத்திலும் ஆறு நாட்கள் சாதனையும் மூன்றுநாட்கள் திருவாசக விழாவும் நடைபெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்தது.

வளர்ந்துவரும் இத்தொண்டு பலரையும் தன்பாலிழுத்துள்ளது. இம்முறை கொழும்பு கதிர்காமயாத்ரீகர் தொண்டர்சபை, கொழும்பு இந்துவாலிபர் சங்கம், குருநாகல் சைவ மகாசபை முதலிய பல்வேறு சைவசமய ஸ்தாபனங்களும் பெருமளவில் பங்கு கொண்டு, இந் நிகழ்ச்சிகள் மக்களுக்குப் பயன் விளைக்கும்படி செய்துள்ளன.

---

# அமெரிக்க நாட்டுப் பொன்மொழிகள்

நீ முரண்பாடில்லாமலிருக்க முயல்வாயாக! ஆனால் உண்மையாக இருக்கமட்டும் நீ உழைத்திடுவாய்.

பாவம் என்னும் கொடியவனுக்குப் பல ஆயுதங்கள் இருந்தாலும், அந்த ஆயுதங்களுக்கெல்லாம் பொருத்தமான ஒரு பிடி உண்டு. அதன் பெயர்தான் பொய்.

— ஹோம்ஸ்.

# தோத்திரங்கள் தியானத்திற்கு வழிகாட்டுகின்றன

— நா. முத்தையா. —

வானுலகிலே உள்ள தேவர்கள் பூவுலகிலேயுள்ள மக்களைப் பார்த்துப் பொறாமைப் படுகிறார்களாம். ''புவனியில் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம் அவமே''

பூமியில் பிறந்து காலத்தைத் தவமாகக் கழிக்காமல் இப்போது அவமாகக் கழிக்கிறோம் என்று தேவர்கள் வருந்துவதாய் மணிவாசகர் கூறுகிறார். பூமியில் பிறத்தல் அரிது. அதிலும் மானிடராய், இறைவனை உணர்ந்து, உள்ளம் நெகிழ்ந்து வாழக் கிடைப்பது மிக மிக அரிய பேறு. அங்ஙனம் உளம் நெகிழ்ந்து இறைவனை நினைப்பதற்குத் திருவாசகம் எமக்கு வழிகாட்டுகிறது. உடலால் வணங்குவதால் உடலுக்கு நலன் ஏற்படலாம். பாடல்களைப் பாடுவதால், வாசாலனாக ஏதுவுண்டு. ஆனால் இறைவன் அருள் அநுபவம் பெற வேண்டுமாயின் எமது உள்ளம் அவனிடத்து ஈடுபட வேண்டும். இதற்கு வழிகாட்டுகின்றது திருவாசகம்.

திருவாசகத்திலே இரண்டு அடிகளைத் தெரிந்து, உணர்ந்து, படித்தால் அதற்குரிய அருள் அநுபவத்தை அது கொடுக்கும்.

''நமச்சிவாய வா அழ்க நாதன் தாள் வாழ்க
இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'

என்ற இரண்டு அடிகளையும் திருப்பித்திருப்பிச் சொல்லி உணர்ந்துவிட்டால், அப்பால் உள்ள அடிகளைச் சொல்ல வேண்டிய சந்தர்ப்பமே இராது. ஏன்? ''இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்னும் போது, இறைவன் தாள்கள் உள்ளத்தே பதிந்துள்ளன. திருவுருவில் கண்ட பாதங்களை அகஉருவில் கண்டுவிட்டால் பின் பேச்சுக்கு இடமேது? ஆண்டவன் திருவுருவைக் கோயிலிலே கண்ட நாம் உடனே கண்மூடி அவ்வுருவை மனத்தில் பதிய வைக்கிறோம். ஆனால் சிறிது நேரத்திற்கு மேல் அவ்வுரு அகத்தில் நிற்பதில்லை. இறைவன் உருவை விளக்கும் பாடல்களை நினைத்துக் கொண்டால் அப்போது அவ்வுருவம் மீண்டும் உள்ளத்தில் தோன்றுகிறது. எனவே அடிக்கடி கோவிலுக்கு வந்து, அவன் உருவைக் கண்டோ அல்லது 'குனித்த புருவமும்' என்பது போன்ற திருப்பாடல்களை நினைந்தோ இறைவன் திருவுருவை மனத்தில் பதிய வைக்கலாம்.

இங்ஙனம் உள்ளத்திருத்திப் பழகி இறைவனைத் தியானிக்கும் போது ஒளி பெறுவோமானால் நாம் ஓரடி முன்னேறியவர்களாவோம். இவ்வொளி உருவத்தை உலகப் பொருட்களில் நாம் காணும்போது சாதனையின் அடுத்தபடிக்கு நாம் வந்து விடுகிறோம். சாதனையில் முக்கிய அம்சம் தியானம். தியானத்தின் மூலம் நாம் நமது உள்ளத்தைப் பரிசோதிக்கும் வாய்ப்பைப் பெறுகிறோம். அதனால் எமது உள்ளத்தை எமது அதிகாரத்துக்கு உட்படுத்தவும் முடியும்.

• •

இறைவனை அடையத் தியானமும், தியானத்துக்கு அருட் பாடல்களும் ஆதாரமாயிருக்கின்றன. ஆண்டவன் புகழ் கூறும் பாடல்களைப் பாடும் போது உள்ளத்தில் ஒருவித நெகிழ்ச்சி ஏற்படுகிறது. திருவாசகத்திற்கு கல்நெஞ்சையும் கனிய வைக்கும் சக்தி உண்டு. ''கல்லைப் பிசைந்து கனியாக்கி'' என்று மணிவாசகர் கூறுகிறார். தமது உள்ளத்தைப் பார்த்து அது இரும்பினும் கடிது என்பதாக "இரும்பு தருமனத்தேனை'' என்கிறார். உலக பாசங்கள் நம்மில் இருப்பதால் கனிந்த நெஞ்சம் கல்லாகிவிடுகிறது; இரும்பாகிவிடுகிறது. இங்ஙனம் வலிதான நெஞ்சை நெகிழ்விக்கும் வன்மை திருவாசகத்துக்குண்டு.

சகல கலைகளிலும் விற்பன்னராக இருந்தும் குரு உபதேசம் பெற்ற பின்னரே மணிவாசகர் திருவாசக மணிகளைப் பாடியுள்ளார். அவர் இறைவனிடம் ஒன்றை வேண்டினார். அது என்ன வென்றால், 'பெருமானே, நான் எந்தக் கோயிலில் சென்று உன்னை வணங்கினாலும் நீ எனக்குக் குருமூர்த்தமாகவே காட்சி கொடுக்க வேண்டும்'' என்பது. திருப்பெருந்துறையிலே முதன் முதல் இறைவன் அவருக்குக் குருமூர்த்தமாக வந்து காட்சி கொடுத்து ஆட்கொண்டார். எப்போது கண்டாலும் அந்த உருவிலேயே இறைவனைக் காண வேண்டும் என்பது மணிவாசகரின் பேரவா. இதனாலேயே திருப்பெருந்துறையைக் குறிப்பிட்டுப் பாடியுள்ள திருவாசகங்களில் தனிப்பட்ட ஒரு சக்தி மிளிர்வதைக் காணலாம்.

# மணிவாசகர் கண்ட மனித வளர்ச்சி

(மு. ஆறுமுகன்)

'நான் ஆர்' என மாணிக்கவாசகர் கேட்கின்றார். எல்லாரும்கேட்க வேண்டிய கேள்விதான். உலகத்தில் உள்ள ஒவ்வொருவரும் இவ் வினாவை எழுப்பினால் உண்மையான வாழ்க்கையின் இலட்சியத்தை அடையலாம். மணிவாசகர் 'நானார்' என்று வினவுகிறார். நாம் 'நான் நான்' என்று பேசுகிறோம். 'அது ஆணவமா? அதுதான் உடலா? அல்லது அதுவேஇறைவனா? என்ற பலஐயங்கள் ஏற்படுகின்றன. அதனையடுத்து அப் பெருமானார் 'என் உள்ளமார்? ஞானங்கள் ஆர்? என்னை யார் அறிவார்? என்று வினவி அதற்கு விடையாக இறைவனைத் தமது தலைவனாகவும் நான் யார் என்பதற்கு உறைவிடமாக நடத்திச் செல்பவனாகவும் இருந்து அவர் வாழ்ந்து காட்டினார்.

மணிவாசகனார் ''கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்'' என்று கூறும்போது கல் என்று குறிப்பிடுவதற்குப் பலவேறு கருத்துக்களைச் சொல்லக் கேட்டோம். ஆனால் கல்லாவதும் ஒரு பிறவியே என்பதற்குத் தாயுமானவர் சான்று கூறுகிறார்.

''கல்லாகப் படைத்தாலும் மெத்த நன்றே
கரணமுடன் நானுறவு கலக்க மாட்டேன்''

என்பது அவர் வாக்கு. புல்லு ஓரறிவு உயிர், மனிதன் ஆறறிவு உயிர். கல்லு ஓரறிவுக்கும் குறைந்தது. தொட்டால் உணரும் அறிவேனும் கல்லுக்கில்லை. படிப்படியாக வளர்ந்த உயிர் ஆறறிவுடைய மனிதனாகி, மனிதனுள்ளும் மெய்ஞ்ஞானம் பெறும்போது ஏழாவதறிவும் உடைய உயிராகிறான். மெய்ஞ்ஞானம் பார்வைக்கும் சிந்தனைக்கும் அப்பாற்பட்டது. ஏழாவது அறிவு பெற்றோர் தாம், இருந்த இடத்திலிருந்தே யோக முறையில் மூவிடத்திலும் முக்காலத்திலும் உள்ளவற்றை அறிவர். அங்ஙனம் உயர்ந்த யோகிகளுக்கெல்லாம் உயர்ந்த யோகியே மணிவாசகப் பெருமான். உலக சராசரங்களின் தொகை நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்ததென அவர் தம் ஞானக் கண்ணால் கண்டு கூறுகிறார். எனவே அவர் ஓரறிவினும் குறைந்ததாகிய கல்லாகப் பிறத்தலைக் கூறுவதில் உள்ள கருத்தைச் சிந்திக்க வேண்டும்.



அந்தக் கரணங்களுடன் தொடர்புறுவதனாலேயே எமது மனம் ஓட்டம் பெற்றுப் பாவ புண்ணியங்களைச் செய்கிறது. தீவினையும் நல்வினையுமே பிறவிக்குக் காரணமாகின்றன. கல்லாகப் பிறந்து கரணத்துடன் தொடர்பின்றி இருந்தால் தூக்க நிலையில் வினை செய்யாதிருப்பேன் என்று தாயுமானவர் கூறுகிறார். 'கல்லா மனிதர்' என்று ஒரு சாரார் கூற, கல்லாய் என்பதை ஆகு பெயராகக்கொண்டு அதில் வாழும் உயிர்கள் என விஞ்ஞானிகள் கூற மெய்ஞ்ஞானியாகிய தாயுமானார் 'கல்லே' என உறுதியாக மலைப்புக்கிடமின்றிக் கூறுகின்றார்.

வேட்டுவவாளி பற்றிய கருத்தைப் பார்ப்போம். திருவாதவூரடிகள் புராணமும், சித்தியாரும் புழுவொன்றை எடுத்துச் சென்று அதனை அடுத்தடுத்துத் தான் கொட்டுவதாலேயே தன் இனமாக்கும் வேட்டுவன் என்று சொல்லுகின்றன. வேறொரு சாரார் அந்தப் புழுவை வேட்டுவப் பூச்சி உணவுக்காகக் கொண்டு செல்லுகிறது என்பர். பிறிதொரு சாரார் வேட்டுவன் தூக்கிவரும் புழுவைத் தன் கூட்டில் வைத்து அதனைக் கொட்டுவதால் அதற்கு உறக்க நிலை ஏற்படுத்தி அந்தப் புழுவின் உடலில் துவாரம் செய்து அதனுள் தன் முட்டைகளை இட, அம் முட்டைகளிலிருந்து வெளிவந்த புழுக்கள் முற்குறிப்பிட்ட புழுவையே உணவாகக் கொண்டு வளர்ந்து வேட்டுவனாகும் என்கின்றனர். மூன்றாவது சொல்லப் படுவதே விஞ்ஞானிகள் தகுந்த ஆதாரங்களோடு கூறுவதாம். இதனால் புராணகாரர் கூறியது பொருந்தாதாயினும், இவ்வளவு அருமையான உதாரணங்களைக் கையாண்டமைக்காக அவர்களை நாம் போற்ற வேண்டும்.

1947ஆம் ஆண்டு இங்கு திருஞானசம்பந்தர் மடம் திறக்கப்பட்ட போது ''அங்கம் ஒழியன்னார்'' என்று கேதுவைக்குறித்துச் சொல்லப்பட்டதாகக் கருதப்பட்ட சொற்றொடர் இன்று ''அங்கம் மொழி அன்னார்'' என்று வேதாங்கங்களை மொழிகின்ற முனிவர்களும் தேவர்களும் என்ற கருத்தில் கொள்ளப்படுகிறது.

இப்படியானமாற்றங்கள்காலத்துக்குக்காலம்நிகழ்வதால் இவற்றை வெகு நுணுக்கமாக பொறுமையோடு அவற்றை அணுக வேண்டுமென்று மிகத் தாழ்மையுடன் ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

# திருவாசகத்தேன்

— பண்டிதை செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி. —

''இறைவ!, தூய உள்ளம் படைத்த — நீறிட்ட அன்பரோடு, அவர் வரிசையில் என்னை ஏற்றினாயே! என்னுடைய தன்மையையும் அவர் தன்மையையும், ஆய்ந்து தான் செய்தனையா? பொல்லா நாயினேனாகிய என்னை அருள்பழுத்த அடியவர்வரிசையில் ஏற்றியதை எண்ண எனக்கேவெட்கமாக இருக்கின்றது·நீயோ அதைஎண்ணிலை; ஆனால்நீயேவந்தென்னை ஆட்கொண்டது மெய். என்னோடு இருந்த மற்றும் பழுத்த மனத்தடியர் எல்லாம் உன்னைச் சேர்ந்து விட்டனர். நானோ இவற்றைக் கண்டு வியந்து,

''மெய்தான் அரும்பி விதிர் விதித்துன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றி யென்னுங்
கைதான் நெகிழவிடேனுடையா யென்னைக் கண்டு கொள்ளே''

என்று இரங்கி உன் அருள் வேட்பில் திளைக்கின்றேன்'' எனத் திருச் சதக முதற் பாடலால் மணிவாசகர் தன்னை இறைவனுக்கு அறிமுகம் செய்து வைக்கின்றார்.

உள்ளம் பொய்யாலும், மயக்கத்தாலும் திரைபோடப் பட்டிருக்கின்றது. இத்திரையை நீக்கின் உள்ளத்தில் ஒளி தென்படும். அதுவே இறை அருள் ஒளியாகும். இதனை வலியுறுத்தவே ''பொய்தான் தவிர்ந்து'' என்றார். இறைவன் இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கியவன். அவனைச் சார எண்ணும் ஆன்மாவும் அத்தன்மை அடைய வேண்டும். ''புரங்கடந்தானடி காண்பான்'' என்னும் திருக்கோவையார் அடியால் இதனை உணர்ந்து கொள்ளலாம். "பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை எல்லா அறமும் தரும்'' என்னும் திருக்குறளும் மேற்கூறிய அருள் உலகிற்கு வழிகாட்டும் என்பதனையே பேசுகின்றது.

இவ்வாறு அருள் ஒன்றையே நோக்காகக் கொண்டு புலம்பித் திரிந்த பித்தராகிய மணிவாசகர், தான் இருந்த தாழ்ந்த நிலையையும், தன்னை ஆட்கொண்ட இறைவனின் பரோபகாரத்தையும் இன்னோர் துறையில் எவ்வாறிசைக்கின்றார் பார்ப்போம்.



''எம்பெருமானே! என்னை நாடி வந்தோரையும் வரவேற்க நாணி மூலையிலே கள்வர் போல் இருட்டறையில் தனியே ஒளித்துஇருந்தேன். அங்கோ உன்ஒளி என்னைத்தேடி வந்தது. இனியும் நீ பிறபிறப்பென்னும் சமுத்திரத்திற் சுழிப்படத் தேவையில்லை, உன்னைக்கரைசேர்க்க வல்ல ஓடம் ஐந்தெழுத்து. அதனைநீ அறிவாயாக என, நான்நோய்வாய்ப் பட்டிருந்தபோது, ஏவலின்றி உன் எழுச்சியில் என் அகம் வந்து கூலியின்றி என் நோய் தீர்த்த வினைக்கேடன்—மருத்துவன் அன்றோ நீ! இவ்விரகசியம் எம்மிருவர்க்கும் தெரிந்த ஒன்றன்றோ! அதுவும் உன் அருள் அறிவை ஐந்து புலன்களும் கொள்ளுமளவை என் கண்ணாகிய ஒரு புலன் கண்டு களிக்க ஆரத்தந்த ஐயாவல்லையோ!'' எனப் பேரானந்தப் படுகின்றார். ''வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று'' தனியனேன் பெரும் பிறபிப் பவ்வத்து'' ''நான் தனக்கன்பின்மை'' என்ற திருவாசக அமுத வாக்குகளால் நாம் இவ்வனுபோகத் தெளிவைக் கண்டு தெளியலாம்.

மணிவாசகர் உலக வழக்கோடு நின்றே திருவாசகத்தைப் பாடினார். பெண்களோடு எதுவித தொடர்பும் அற்றவர், எமக்காகத் தன் ஞானநோக்கால் பெண்ணின் வழியதே உலகம் என்ற உண்மையை எடுத்துக் கூறத் தவறவில்லை. சூரிய ஒளியைக் கொண்டே சூரியனைக் காண்பது போல், அருள்வடிவாகிய அம்மை மூலமே அப்பரைக் காணலாம் என்பதனை இக்காலக் குடும்பத் தலைவன் தலைவியர் அறிந்து கொள்ள வேண்டியதவசியம்.

மேலும் மிதமிஞ்சித் தேனை உண்டால் அது, மயக்கத்தைத் தரும். இங்கு திருவாசகத்தை உண்டால் சிவமயக்கம் உண்டாகும். இதற்கு உதாரணமானவர் இராமலிங்க அடிகளாவர். உள்ளத்தை அதனோடு ஒட்டிக்கலந்து பாடும் போது சிவமயக்கம் ஏற்பட்டு, அப்போதையால் ஆன்ம ஈடேற்றம் ஏற்படும் என்பது உண்மையாம்.

# திருவெம்பாவை - அதன்தத்துவம்

( பொன். அ. கனகசபை. )

ஆதியும் அந்தமும் இல்லாத அருபெரும் சோதியைப் பாடி, வீடுவீடாகச் சென்று தம் தோழியரையும் துயிலெ ழுப்பிக் கொண்டு புனலாட்டுக்குப் போகிறார்கள் சிறுமியர். மொய்யார் தடம் பொய்கை புக்கு அவர்கள் முகேர் முகேர் எனக்கையால் புனலைக் குடைந்து குடைந்து நீராடி மகிழ் கிறார்கள். நீராடிய சிறுமியர் பின்னர் மழையைப் பாடு கிறார்கள். இறைவன் அன்பர்க்கு அருளுவதற்கு முன்னரே எம்பிராட்டி தமக்கு அருள் சுரப்பது போலப் பெய்யும்படி மழையைப் பிரார்த்திக்கின்றனர்.

மழை பொழிவதையும், வெயில் எரிப்பதையும், காற்று வீசுவதையும் நாமும்தான் அடிக்கடி காணுகின்றோம். ஆனால் மணிவாசகர் இவற்றைக் காணும்போது இவற்றின் மூலம் இறைவன் திருவருளையே காணுகிறார். ஐந்து வயது முதல் ஒன்பது வயது வரையுள்ள சிறு குழந்தைகள் கூறுவதாக அமைத்து மழையை வழுத்துகிறார். மழையிருந்தால் மட் டுமே உலகம் வாழலாம் என்றஉண்மையை வலியுறுத்த வல்லவா வள்ளுவரும் கடவுள் வாழ்த்தை அடுத்து வான் சிறப்பை வைத்தார். இறைவியின் நிறத்தை நினைவுபடுத் துகிறது சூல்கொண்ட மேகம். அவள் இடை போல மின் னலும், அவள் சிலம்பின் ஒலிபோல முழக்கமும், செய்கிறது. அவள் புருவம் போல் வானவில் பொலிகிறது. இத்தனையும் காட்டி அவள் அருளே போல் பொழியும் மழையை வாழ்த் துகிறார். பதினாறாவது பாட்டில் இவற்றைக் கூறிப் பதினாறு பேறும் தமக்கு வேண்டு மெனச் சிறார் கேட்பது உட்குறிப் புப் போலும்!

பத்தொன்பதாவது பாட்டிலே ஒரு விண்ணப்பம். அது நிறைவேறி விட்டால் சூரியன் கிழக்கில் எழுந்தாலென்ன மேற்கில் எழுந்தாலென்ன என்ற கவலையற்ற இறுமாந்தநிலை. அப்பர் பாடினாரே ''நாமார்க்கும் குடியல்லோம்'' என்று; அதுபோல அச் சிறுமியர் நெஞ்சில் ஓர் அஞ்சாமை நிலை;

இருபதாவது பாட்டில் இறைவனின் பஞ்சகிருத்தியங் கள் பரவப்படுகின்றன. ''ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி'' எனத் தொடங்கிய மணிவாசகனார் முடி யும் போதும், போற்றி அருளுக நின் ''ஆதியாம் பாதமலர்'', ''அந்தமாம் செந்தளிர்கள்'' எனக் கூறுகிறார். ''ஆதியும் அந்தமும்'' என்று இவர் தொடங்க மெய்கண்டதேவர் ''அந்தமும் ஆதியும் என் மனார் புலவர்'' எனத் தொடங்கு கிறார். போற்றி யருளுக நின் ஆதியாம் பாதமலர் எனத் தொடங்கி படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் ஆகியவற்றை முறையே விளக்குகிறார்.



பெண்ணாகப் பிறத்தலே பாவம் எனச் சமணமும் பௌத்தமும் கூறிய போது, திருவெம்பாவை மூலம் பெண் களுக்கு முக்கிய இடம் கொடுத்து ஒரு புரட்சியே செய்து விட்டார் மணிவாசகர்.

எங்களுக்கு தைமுதல் ஆனிவரையுள்ள ஆறு மாதமும் தேவர்களுக்குப் பகற்போதும், ஆடி முதல் மார்கழி வரை யுள்ள ஆறுமாதமும் இரவும் ஆகும். மார்கழிமாதம் தேவர் களுக்கு விடியுமுன்னுள்ள இரண்டரை நாழிகையாம். அரு ளல் என்னும் கிருத்தியத்தைக் குறிக்கும் திருவனந்தற் பூசை நடைபெறுகிற காலம் இது. இன்னும் மார்கழி என் பது (மா—ஒடுக்கம்; கழி—நீங்குதல்) ஒடுக்கத்திலிருந்து நீங் குதல் எனப் பொருள்படும். மாயையிலே கேவல நிலையில் ஒடுங்கியிருந்த ஆன்மாவைப் பிரித்தெடுத்து அதற்குத் தனு கரண புவன போகங்களைக் கொடுத்து அதனை ஒளி உள்ள தாக்கும் பண்பைக் குறிப்பது மார்கழி மாதம் எனபர். இன்னும் ஆதிரை — (ஆ—பசு; திரை — அழுத்துதல்) ஆன் மாவை உலக அனுபோகத்தில் அழுத்தி மெய்யுணரச் செய்தல் என்பது பொருள். இம் மாதத்திலே பொழுது புலருமுன் முற்றத்தைக் கூட்டி மெழுகிக் கோலமிட்டு சாண உருண்டை வைத்துப் பூச்சாத்துவர் எம் அன்னை யர். இதில் வைக்கப்படும் சாண உருண்டை ஆன்மாவை உலக அநுபவத்தில் அழுத்தலைக் குறிக்கும். அதன் மேல் சூடப்படும் மஞ்சட்பூ, தனுகரண புவன போகங்களைத் தந்த பிரம தேவனை நினைப்பூட்டுகிறது.

ஆர்த்திரா தரிசனத்தின் பின் கறுத்தப் பசு ஒன்றைக் கொணர்ந்து அதன் முகம் சுவாமியைப் பார்க்காது பின் புறம் காட்டும்படி விடுகிறார்கள். இதன்தத்துவம்,— கறுத் தப் பசு; ஆணவ இருள் பீடிக்கப்பட்ட ஆன்மா; அது ஆண்டவனைப் பார்க்க மறுத்து உலக பந்த பாசங்களை யே நாடி ஓட முயலுகிறது.

இன்னும் இவை போன்ற பலப்பல தத்துவார்த்தங் களைக் கொண்ட திருவெம்பாவையை நாம் கை நெகிழ விடுதல் கூடாது. ஒவ்வொருவரும் இதனைப் பாடி உமையின் அருள் பெற்று வாழ்வோமாக. நாம் ஒவ் வொருவரும் வாழ, வீடு வாழும்; வீடு வாழ நாடு வாழும்.

# திருவாசகம் விழிப்புணர்ச்சியைத் தருவது.

(மு, சோமசுந்தரம்)

உலகில் விஞ்ஞான அறிவு மிக வேகமாக வளர்ந்து வரும் இன்றையசூழ்நிலையிலே எங்கோ ஒருமூலையில் நாம்கூடி இறைவனைப் பற்றியும் திருவாசகத்தைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறோம் என்றால் அது அறியாமையாலன்று. அந்தக்காலத்தில் விஞ்ஞானத்தால் நன்மையைக் காட்டிலும் தீமையே அதிகமென்று உணர்ந்து அதனை வளர்க்காமல் மெய்ஞ்ஞானத்தை வளர்க்கத் தலைப்பட்டார்கள். விஞ்ஞான அறிவியல் ஒரு குறிப்பிட்ட அளவுக்கே சென்று செயலாற்ற முடியும். ஆனால் மெய்யறிவு இதற்கப்பாலும் சென்று செயலாற்றும். அறிவியல் புறவாழ்க்கையிலே மாறுதல்களை உண்டாக்கலாம். மெய்யுணர்வோ உள்ளத்துக்கு இனிமை ஊட்டுவது மட்டுமன்றி பிறர்க்கும் மெய்யுணர்வை ஊட்டத்தகுந்த பாடல்களையும் தந்து நன்மை பயக்கத் தகுந்ததென நாம் அறிகிறோம். ''அறிவியல் செயலாற்ற முடியாத நிலையில் அங்கு சமயஉணர்வு தோன்றித் தன் கடமையைச் செய்ய முற்படுகின்றது'' என மேனாட்டறிஞர் ஒருவர் கூறினார். இந்த உண்மை என்றும் மாறாமல் இருந்து வருகிறது. சென்ற நூற்றாண்டில் விஞ்ஞானம் தந்த கருவிகள் இப்போது நமக்குப் பயன் படாதபோது, என்றோ பாடப்பட்ட திருவாசகம் போன்றநூல்கள்ஒருவிழிப்பைத்தருகின்றனவென்றால், அவற்றின் சிறப்பு எத்தகையது என்பதை நாம் அறியலாம். உதாரணமாக, பாரிவாழ்ந்தான், அவன் பெரிய வள்ளல்; முல்லைக் கொடிக்குத் தன் தேரை ஈந்தான், அவனுக்கு மகளிர் இருவர் இருந்தனர் என இன்றைக்கும் நாம் அறியக்கூடிய தாகப் பாடல்கள் உண்டு. இன்று பாரியின் தேர் கிடைத்தால் அதனை நூதன சாலையில் வைப்போம். ஆனால் அவன் மகளிர் பாடிய ''அற்றைத் திங்கள்'' என்ற பாடல் பல்லாயிரம் மக்கள் நாவில் தவழ்ந்து நெஞ்சில் இனிக்கிறது.

மணிவாசகர் கையிலிருந்த ஏடும் எழுத்தாணியும் இன்று கிடைத்தால் அவற்றுக்கும் இடம் நூதன சாலையாகத்தான் இருக்கும். ஆனால் அவர் பாடல்களைப் படிக்கும்போது உள்ளம் உருகுகிறது. அன்று மணிவாசகர் பெண்கள் குடங்களை எடுத்துக் கொண்டு அதிகாலையிலே நீராடச் சென்று கொண்டே பாடியதாக அருளிச் செய்த திருவெம்பாவை இன்றும் தெரு



வீதிகளிலே மணக்கும்படி பக்தர்கள் பாடுகிறார்கள். புறவாழ்க்கையில் அந்தநாட்களுக்கும் இந்தநாட்களுக்கும் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டுள்ள போதிலும் அக வாழ்க்கையில் மாறுதல்கள் ஏற்படவில்லை. மணிவாசகப் பெருந்தகை விஞ்ஞான அறிவு மிகுந்தவர் என்பது அவர் பாடல்களிலிருந்து நன்கு தெரிகிறது. அங்ஙனம் விஞ்ஞானக் கருத்துக்களெல்லாம் துறைபோகிய அவர் 'என் அகவாழ்வில் இன்பம் பெறக்கூடாது' என எண்ணி, மந்திரிப் பதவியைத் துச்சமாக மதித்து ஆண்டவனுக்கு ஆட்பட்டார். அத்துடன் நாமெல்லாம் இறைவனை நினைத்தற்கும் பாடுதற்கும் ஏற்ற வகையில் திருவாசகத் தேனைத் தந்திருக்கிறார்.

திருவாசகம் தேனினும் இனியது. ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்க வல்லது. ''மனிதரை ஏன் புகழ்ந்து பாடுகிறீர்கள்? பாரியைப் போல் வீமனைப் போல் ஒருசிலர் இருக்கலாம். அவர்கள் பூரணமர்கக் கொடுக்கமாட்டார்கள். இறைவனைப் புகழ்ந்து பாடுங்கள், அவன் நீங்கள் வேண்டியதெல்லாம் கொடுப்பான்'' என்று சுந்தரர் சொல்லுகின்றார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ''ஈயென இரத்தல் இழிந்தன்று'' எனப் புற நானூறும் ''ஆவுக்கு நீரென்றிரப்பினும் நாவுக்கு இரவின் இழிவந்ததில்'' என்று குறளும் பேசுகின்றன. இந்தச் சூழ்நிலையிலே உள்ளவராய் மணிவாசகர் ஒரு பாடலைப் பாடுகின்றார்.

''பரந்துபல்லாய் மலரிட்டு முட்டாதடியே இறைஞ்சி
இரந்த வெல்லாம் எமக்கே பெறலாம் என்னும் அன்பர் உள்ளம்
கரந்து நில்லாக் கள்வனே நின் வார்கழற்கு அன்பெனக்கு
நிரந்தரமாய் அருளுகண்டாய் நின்னை ஏத்த முழுவதுமே''

இறைவனுடைய அருளிலே ஆட்பட்டு அவனுடைய சிந்தனையிலேயே ஈடுபட்டுப் பேசும் பேச்சல்லவா இது!

---

சுவர்க்கம் இருக்கிறதே அது கேட்காமலே கிடைக்கும். ஆனால் கடவுளோ கேட்டால்தான் கிட்டுவார். — லவ்வல்.

ஒரு மனிதனுடைய இலட்சியம் என்ன என்று அறிந்து கொண்டால் போதும். அதனைக் கொண்டே அவனை அறிந்து கொள்ளலாம். — ஹோம்ஸ்.

# பாவை பாடிய வாயால் இறைவன் விருப்புக்கு கோவை பாடிய செம்மல்

— ஆ. கந்தையா, எம். ஏ. —

தமிழகத்தில் தோன்றிய பக்தி நூல்களுள்ளே திருவாசகம் தலை சிறந்தது. பெருந்துறை புகுந்து பேரின்பம் மூழ்கிய புனிதராகிய மணிவாசகரின் மணி மொழிகளின் தொகுதியே திருவாசகம். திருவாசகம் மனங்கனிய மலங்கெடுக்கும் மாண்புடையது; இருளகற்றி எஞ்ஞான்றும் இன்பம் நல்கும் சிறப்புடையது; ஊனினை உருக்கி உள்ளொளிபெருக்கும் பான்மையது. நாளும் நற்றவர் வழிபடும் மேன்மையது; திருவாசகத்தில் இடம் பெறும் அருட்பாடல்கள் ஒவ்வொன்றும் பக்தியுணர்வை உண்டாக்கவல்லன. அருள் சக்தி வாய்ந்தவை. கல்நெஞ்சையும் கரைய வைக்கும் இயல்புடையவை.

## பக்தியால் பரவசமானோர்

திருவாசகத்தில் பக்திப் பண்பால் பரவசமானோர் பலர். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை மணிவாசகத்தில் ஈடுபாடு கொண்டு கற்றார். அதன் உயர்வையும் சிறப்பையும் பலவாறு புகழ்ந்தார். ''மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தில் மாண்டவர்கள் கனஞ்சடையென்று உருவேறிக் கண்மூடிக் கதறுவரோ?'' என்று வினவி வியப்படைகின்றார். திருவாசகத்தின் பக்தியில் மனதை பறி கொடுத்த இன்னொருவர் பரஞ்சோதியார். ஆனந்த பரவச நிலையில் எற்புத் தொளை தொறும் நெக்கு நெக்கு உள்ளம் கசிந்து பக்தி மேலீட்டால் கண்ணீர் வெள்ளம் போல பெருகியோட மணிவாசகர் திருவாசகத்தைப் பாடினாரென்பதை பரஞ்சோதி முனிவர், 'அழுது அடியடைந்த அன்பன் எனப் புகழும் திருவாக்கால் அறியலாம். இராமலிங்க அடிகளாரும் திருவாசகத்தைக் கலந்து பாடிப் பக்தி உணர்வால் பரவசமானார். எனவே திருவாசகத்தின் சுவையை உள்ளவாறு அவரால் எடுத்துரைக்க முடிந்தது.



''வான் கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுந்தீஞ் சுவை கலந்து
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே''

என்று சுவைத்துச் சுவைத்து இன்பங் கண்டார். திருவாசகத்தின் பக்தி உணர்வு தமிழ் உள்ளங்களை மாத்திரம் பரவசமடைய வைக்கவில்லை. வெளி நாட்டாரின் நெஞ்சையும் கரைய வைத்தது. கிறிஸ்தவப் பாதிரியாகப் பணி புரிந்த போப்துரை மகனார் தாம் எழுதிய திருவாசக மொழி பெயர்ப்பில் தாம் உருகி உருகி கண்ணீர் வடித்ததை குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு இறையுணர்வுள்ள அன்னியரின் நெஞ்சையும் கரையவைத்த பெருமை திருவாசகத்திற்குண்டு.

## பக்தி 'எப்படியானது?

மனிதனின் உள்ளத்திற்கும், மற்ற உயிர்களின் உள்ளத்திற்குமிடையே பெரியதொரு வேறுபாடுண்டு. மனிதன் மற்றவர்களின் துன்பத்திற்காக இரங்குகின்ற உள்ளம் உடையவன்' மிருகங்கள் மற்ற மிருகங்களின் துன்பத்தைக் கண்டு கண்ணீர் விடுகின்றனவா? பறவைகள் மற்ற உயிர்களுக்காக இரங்குகின்றனவா? இல்லையே! மனிதன் தான் மற்ற உயிர்களுக்காக இரங்குகின்றான். கண்ணீர் பெருக்குகின்றான். இவற்றிற்கும் மேலாக இறைவனை நினைந்து கசிந்துருகும் உள்ளம் மனிதனுக்குத்தான் இயல்பாக இருக்கின்றது. இறைவன் புகழைப் பாடுகின்ற பொழுதும்; இறைவனது பெருமையைப் பேசுகின்ற பொழுதும்; இறைவனை அகக் கண்களால் காண்கின்ற நேரத்திலும் நமது உள்ளம் உருகுகின்றது. உடல்நெகிழ்கின்றது. ஆலயத்தில் இறைவனைக் காண்கின்றபொழுதும் நமதுகைகள் நம்மைஅறியாமலே தலைமேல்குவிகின்றன; உள்ளமும்உடலும்உருக, மயிர்கூச்சலெறிகின்றது. அப்போது கண்கள் பக்திக் கண்ணீரைப் பெருக்கி விடுகின்றன. மணிவாசகப் பெருமான் இவ்வாறு தான் பெற்ற உணர்வினை 'மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்துன் விரையார் கழற்கென் கைதான் தலைவைத்துக்கண்ணீர் ததும்பி வெதும்பி யுள்ளம் பொய்தான் தவிர்த்து போற்றி சயசய போற்றி'' என்று பாடியுள்ளார். மணிவாசகரது இத்திருவாசகத்தைப் பாடும் பொழுதும், பாடக் கேட்கும் பொழுதும் நாமும் அவ்வுணர்வினைப் பெறுகின்றோம் அல்லவா?

## அழுகையின் தத்துவம்

இறைவனை நினைந்து அழுது அழுது அவனடியை அடைந்தவர் மணிவாசகர். ஆனந்த பரவச நிலையில் உள்ளம் கசிந்து கண்ணீர் பெருக மணிவாசகர் திருவாசகத்தைப் பாடி இறைவனடியை அடைந்தார். அதனால் மணிவாசகரை ''அழுது அடியடைந்த அன்பன்'' என்று கூறுவர். அவ்வாறு கசிந்துருகிப் பாடிய பாடல்களானமையில் அவை கல்நெஞ்சையும் கரைக்கும் ஆற்றல் நிறைந்தனவாக காணப்படுகின்றன. 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்பது முது மொழி.

மனிதனாகப் பிறந்தவன் பல காரணங்களுக்காக அழுகின்றான். உண்பதற்கு உணவில்லையே என்று ஒருவன் ஏங்கி அழுகின்றான். இன்னொருவன் கொடிய நோயை தாங்க முடியாது 'ஐயோ' என்று அலறுகின்றான். தந்தையை இழந்த தனயனும் அழுகின்றான். தனயனை இழந்த தாயும் அழுகின்றாள். இவை வாழ்க்கைப் பாதையில் சர்வ சாதாரணமாக நிகழ்பவை. ஆனால் இறைவனை நினைந்தும் சிலர் அழுகின்றார்களென்றால் அது பலருக்கு நகைப்பைக் கொடுக்கலாம். மணிவாசகப் பெருமான் இறைவனை நினைந்து கசிந்துருகிக் கண்ணீர் பெருக்கினார். அந்தப் பக்திக் கண்ணீரால் தனது மனத்து மாசைக் கழுவினார். இரண்டற தூய்மையான உள்ளத்தோடு இறைவன் திருவடியை அடைந்தார். இதனை மணிவாசகப் பெருமானே ஓர் இடத்தில் குறிப்பிடுகின்றார்.

''இறைவா! யான் என்பதாகிய உயிர் என்னிடத்தில் இருப்பது பொய். அப்படி இருந்தாலும் அதற்கு நெஞ்சம் ஒன்று உளதென்பது பொய். அங்ஙனம் நெஞ்சொன்று இருப்பதெனக் கொண்டாலும் அதன் மாட்டு அன்புளதென்பது பொய். அதன்கண் அன்பிருக்குமானால் தீவினையேன் அழுது உன்னை அடைய முடியுமல்லவா? அங்ஙனம் அழாதவனாகிய அடியேன் உன்னை வந்து கலக்குமாறு எனக்கு அருள் புரிவாய்'' என்று மணிவாசகர் இறைவனை வேண்டுகின்றார்.

''யானே பொய் என் நெஞ்சம் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே



தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருள்வாய் அடியேன்உனை வந்துறுமாறே''

என்று கசிந்துருகிப் பாடுகின்றார். அவ்வாறு அழுது இறைவனது திருவடியை அடைந்த மணிவாசகரது திருவாசகத்தைப் பாடிப்பாடி காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நாமும் பக்திப் பரவசமாகலாமல்லவா?

## வேதத்திலும் உயர்ந்தது

வேதம் இறைவனால் அருளிச் செய்யப்பட்டது. திருவாசகம் இறைவழி நின்ற அருளாளரான மணிவாசகரால் பாடப்பட்டது. இறைவனால் அருளிச் செய்யப்பட்ட வேதத்திற்கும் மணிவாசகர் பாடிய திருவாசகத்திற்கும் பெரியதொரு வேறுபாடு உண்டு. வேதத்தைப் படித்து உள்ளம் உருக இயலாது; ஆனால் திருவாசகத்தைப் பாடிப் பாடி உடலும் உள்ளமும் உருகி நிற்கமுடியும். ஆம்; வேதத்தைப் படித்து உருகுவார் சிலர். ஆனால் திருவாசகத்தைப் பாடி உருகுவார் பலர். ஆகவே இறைவனால் அருளிச் செய்யப்பட்ட வேதத்திலும், அந்த இறைவனையே நினைந்துருகி மணிவாசகரால் பாடப்பட்ட திருவாசகம் சிறந்ததல்லவா?

இதைவிடத் திருவாசகத்திற்கு இன்னொரு சிறப்பும் உண்டு. மணிவாசகப் பெருமான் எந்த நிலையில் நின்று திருவாசகத்தைக் கசிந்துருகிப் பாடினாரோ, அந்த பக்தி நிலையில் நின்று திருவாசகத்தைப் பாடுவோர் உள்ளம் உருகி நிற்பர்; மனங் கசிந்துருகிப் பாடுவதைக் கேட்டு நிற்போரும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நிற்பர். எனவே பாடுவோரையும், பாடுவதைக் கேட்டிருப்போரையும் உருக வைப்பது திருவாசகம். இதனாலேயே திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார் என்று நம்முன்னோர் உணர்ந்து உரைத்தனர்.

## இறைவனே விரும்பினான்

திருவாசகத்தின் பக்திப் பண்பு இறைவன் உள்ளத்தையே கொள்ளை கொண்டது. அதனால் திருவாசகத்தைச் சிவபெருமான் 'மணிவாசகம்' என்றுபாராட்டினார். இறைவன் திருவாசகத்திலுள்ள தத்துவக் கருத்துக்களை விரும்பினானல்லன். விஞ்ஞான நுட்பங்களை ஆராய்ந்து அறிந்தானுமல்லன். இலக்கியச் சுவைக்கு இதயத்தைப்பறி கொடுத்தானுமல்லன்.

மணிவாசகரின் பக்தியுள்ளந்தான் இறைவனின் திருவுள்ளத்தைக் கவர்ந்தது. இவ்வுண்மையை இறைவனது அருள் வாக்கே தெளிவுபடுத்தும்.

மணிவாசகருடைய திருவாசகப் பாடல்களுள்ளே இறைவனுக்குத் திருவெம்பாவையில் நிறைந்த ஈடுபாடுண்டு. திருவெம்பாவைப்பாடல்கள் சிவபெருமானிடத்துப்பேரன்பு கொண்ட மங்கையர்களின் பக்திப்பண்பைப் புலப்படுத்துவன. எனவே, அப்பாடல்கள் இறைவனது திருவுள்ளத்தைத் தொட்டதென்றால் அதில் வியப்பில்லையே! ஆகவே திருக்கோவை பாடும்படி ஏடும், எழுத்தாணியும் கொண்டு இறைவன் மணிவாசகரைப் பணித்த போது எதை வேண்டினான்? நீத்தல் விண்ணப்பம் பாடிய வாயால் கோவை பாடுக என்றானா? அல்லது திருச்சதகம்பாடியவாயால் சிவபுராணம் பாடிய வாயால் கோவை பாடுக என்றானா? "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என்று தான் பணித்தான். எனவே இறைவனும் மணிவாசகரது பக்தியுள்ளத்தையே விழைந்தான் என்பதைக் காண்கின்றோம்.

### பிண நெஞ்சம்

இறைவனை நினைந்து என்புருகி ஆடியும் பாடியும் நில்லாத தன்னுடைய நெஞ்சத்தை மணிவாசகப் பெருந்தகை "பிணநெஞ்சே" என்று வைக்கின்றார்.

"ஆடுகின்றிலை கூத்துடை யான் கழற்கு அன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைபதைப்பதும் செய்கிலை பணிகிலை பாத மலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றது மிலை துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவு தோறு அலறிலை செய்வ தொன்று அறியேனே"

என்று மாணிக்கவாசகர் கதறிஅழுதலை மேற்படி பாடல் இனிது புலப்படுத்துகின்றது.

ஆகவே மணிவாசகப் பெருந்தகையின் பாடல்கள் உள்ளத்தை உருக்கவல்லன. பக்தியோடு பாடப்பட்டமையால் பாடுவோரையும், பாடக் கேட்போரையும் பக்திப் பரவசமாக்கும் பெற்றி வாய்ந்தன.



# பெரியார்கள் காட்டும் வழி

— கி. இலக்குமணன். M.A. —

பெரிய மகான்களுடைய வாழ்க்கையை எடுத்துக்காட்டி அவற்றை நாம் பின்பற்ற முடியுமா என்ற கேள்வியைக் கேட்கும்போது பல இடைஞ்சல்கள் ஏற்படும். இராமனுடைய வாழ்க்கையை எடுத்துச் சொல்லி அதை நாம் பின்பற்ற வேண்டுமென்றால், சிலர் இராமன் வாலியை ஒளிந்து நின்று கொன்றான்; அதுபோல் நாம் ஒழுங்கீனமான செயல்களைச் செய்வதா என்று கேட்பார்கள். சிறுத் தொண்டர் அடியவருக்குத் தமது மகனையே கறி சமைத்துக் கொடுத்தவர். இயற்பகை நாயனார் தமது மனைவியையே அடியவருக்குக் கொடுக்க முன்வந்தவர். பெரியவர்களுடைய வாழ்க்கையை எப்படிப் பின்பற்ற முடியும்? அவர்களுடைய உல்கம் வேறு; எங்களுடைய உலகம் வேறு. ஆகையினாலே கூட்டத்திலே பேசுவதற்கும், அவர்களைப்பற்றிக் கட்டுரை எழுதுவதற்குமே அவர்கள் பயன்படுவார்கள் எனச் சிலர் கூறுவர். அந்த மட்டுந்தானா? ஏதாவது ஒருவழியிலே நேரடியாக அவர்களைப் பின்பற்ற முடியுமா என்கிற ஒரு கேள்வியை நாம் கேட்க வேண்டியிருக்கிறது. 'மணிவாசகப் பெருமான், மேற் கூறிய ஏனைய அடியார்கள் ஆகியோர் எமக்கு எந்தவகையில் பயன்படுவார்கள், அவர்கள் வாழ்வு தரும் பாடத்தை நாம் நம்முடைய ஆற்றலுக்கேற்ப எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம்' எனச் சிந்திப்போம்.

மணிவாசகப் பெருமான் தம் வாழ்வில் முதலில் மந்திரியாக இருந்து, அதை உதறித்தள்ளி இறைவன் பணியில் ஈடுபட்டவர். நம்முன் உயர்ந்தபதவிகளில்இருப்பவர்கள்கூட அவற்றைத் துச்சமாக மதிப்பதற்கு அவர் நல்லமுறையில் நமக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறார். "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு" என்பது அவர் திருவாக்கு. இவர் 'நாமார்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம்' என்று சொல்வதும். அப்பர் சுவாமிகள் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்று சொல்வதும் நாம் பின்பற்ற வேண்டிய இடங்கள். ஒவ்வொருவரும் தத்தம் ஆற்றலுக் கேற்பப் பதவிகளையோ உத்தியோகங்களையோ,

பிறருக்கு அடிபணிந்து நடந்து சலுகைகளை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற ஆசையை அகற்றுவதற்கு இது ஒரு வழியாகும்.

இனி, அவர் தம் திருவாசகங்கள் மூலம் நாம் செய்யத் தக்கது எது செய்யத்தகாதது எது என்பதை தெரிவிக்கும் இடங்கள் சிலவற்றைப் பார்ப்போம். ''ஆமாறுன் திருவடிக்கே அகங் குழையேன்'' என்ற பாடலில் செய்ய வேண்டியவை எவையெனத் தெரிவிக்கிறார். இதில் கூறப்பட்ட செயல்கள் மிக உயர்ந்த சரியைத் தொண்டாகும். செய்யத்தகாதவைகளைக் கூறுமிடத்து ''வேனில்வேள் மலர்க்கணைக்கும்'' என்ற பாடலில் புலன்களை அலைந்து போகவிடாமல் தடுக்கவேண்டுமென்பதைச் சொல்லுகிறார். புலன்கள் ஒருவனை எப்படி ஆட்டியலைக்கின்றன என்பதை 'அடற்கரிபோல் ஐம்புலன்களுக்கு அஞ்சி அழிந்த என்னை' 'மத்துறு தண்தயிர்போல' • 'எறும்பிடை நாங்கூழ் எனப் புலனால் அரிப்புண்டு அலந்த' என்பனபோன்ற வாசகங்களில் விளக்குகின்றார். அடுத்து,

அவர் தம்மை இழித்துச் சொல்லும் இடங்களைக் கவனிப்போம். 'பொல்லா நாயனான நீசனை' 'அவாவெள்ளக் கள்வனேன்' 'யானே பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய்' எனப் பலவிதமாக அவர் கூறுகிறார். மணிவாசகர் தம்மை இவ்வளவு தூரம் இழித்துச் சொல்லுதல் பொருந்துமா? அவர் கூற்றை அப்படியே எடுத்துக் கொள்ளலாமா என்பதுபற்றி அறிஞர்கள் இரண்டுவிதமான கருத்தைக் கொள்ளுகின்றார்கள். அவருடைய சொந்த அநுபவவாயிலாக வெளிவந்த உண்மை என்று ஒருசாரார் கொள்ளுகின்றனர். அதனால் அவர் நம்மைப்போல் ஒருவராகி விடுகிறார், அவர்மேல் நமக்கு ஈடுபாடும் அதிகமாகிறது. நாம் முன்னேற நல்ல வழியாகும் என்பர் சிலர், மற்றவர்களுடைய கருத்து அந்தமகான் சொல்லும் இவற்றை உபசாரமாகக் கொள்ள வேண்டுமென்பதும், ஏனைய ஆன்மாக்களுக்கு ஏற்படும் துன்பங்களைத் தம் மேல் ஏற்றிச் சொன்னார் என்பதுமாம்.

இனி உள தத்துவஞானியர் எப்போதும் உயர்ந்தபண்புகளையே நினைத்து உயர்ந்தவற்றையே சொல்லுவதால் அவற்றை அடையலாம் என்றும் தாழ்ந்தவற்றையேநினைத்து தாழ்ந்தவற்றையே சொல்லுவதால், அவற்றைத்தான்



அடைய முடியும் என்றும் கருதுகிறார்கள். ஆனால் நாம் நம்முடைய குறைபாட்டைத் திறந்து சொன்னால் நம்மைத் திருத்தி உயர்ந்தவர்களாக வழிபிறக்கும் என்பது மட்டும் உண்மை. இவ்விதம் குறைகளைக் கூறியவர் அவற்றை நீக்குதற்கும் வழிசொல்லுவாராய் ''வெள்ளந்தாழ் விரிசடையாய்'' என்ற திருவாசகத்தில், தன்னுடைய தேகம் முழுவதும் கண்ணாக இருந்தால், அவற்றிலிருந்து வெள்ளமாய்க் கண்ணீர் பெருகினால் தூய்மையடையலாம் என்கிறார். துருப்பிடியாத இரும்பைக் காந்தம் இழுப்பது போல, மாசில்லாத உள்ளங்களை, (ஆன்மாக்களை) இறைவன் தன்பால் இழுக்கிறான். கண்ணீரினால் மாசு நீக்கலாம் என்பது அவர் கூறும் பேருண்மை.

ஆகப் பெரியவர்கள் எந்தத் துறையில் மேம்பட்டவராய் விளங்கினார்களோ, அந்தத்துறையில் அவர்களைப் பின்பற்றி நாம் உயர்வடைய • வேண்டும். இராமனை ஏகபத்தினி விரதத்திலும், சிறுத்தொண்டர், கண்ணப்பர் இவர்களுடைய லட்சியங்களிலும் என்ன உண்டு என்பதை உணர்ந்து பின்பற்றுவதே எமக்குய்வு தருவதாகும்.

## அமெரிக்க நாட்டுப் பொன்மொழிகள்

ஒரு மனிதனுக்குத் தேவையான அறிவு இல்லாத மூடர்களின் செயல்களே தந்திரம்; ஏமாற்றம்; அறவழி நிற்க மறுத்தல் முதலியன.

— பிராங்க்லின்.

சான்றோர் கெட்டாலும் அவரின் உயர்ந்த பண்புகள் அழியாது. — லாங்பெல்லோ.

மனிதன் அடையக் கூடிய உயர்ந்த பொருள் அறிவு என்பர்; ஆனால் அது மட்டுமல்ல அறிவினுள் கலந்த அனுதாபமே உயர்ந்தது. — தோரோ.

# சிவநெறி

(நீதிபதி. வே. க. கந்தசாமி)

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளாய இறைவனை, முதல்வனாகக் கொண்ட நெறியே, சிவநெறியாகும். இதுவே சைவ நெறியுமாம். இந்நெறி வாழ் உயிர்கள் அப் பழம் பொருளின் திருவடிகளை அடைய வேண்டும் என்ற ஒரே நோக்குடனே, அவனை வழிபாடாற்றுகின்றன. அப் பொருளுடன் சேர்ந்த சமயாசிரியர்களும், மற்றும் அறநூலாரும் எமக்கு இவற்றையே வலியுறுத்திக் காட்டுகின்றனர். எமது சைவத் திருமுறைகள், திருக்குறள் முதலாம் நூல்கள் மூலம் இவற்றை நாம் அறிந்து கொள்ளலாம்.

''முற்றா வெண் டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே''

''இடரினும் தளரினுமெனதுறு நோய்
தொடரினுமுன் கழல் தொழு தெழுவேன்''

என ஞானசம்பந்தரும்,

''கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன
கண்டேன்''

''கருவுற்ற நாள் முதலாகவுன் பாதமே காண்பதற்கு''

எனத் திருநாவுக்கரசரும்

''மற்றுப் பற்றெனக் கின்றிநின் திருப் பாதமே மனம்
பாவித்தேன்''

''அழுக்கு மெய் கொடுன் திருவடி
யடைந்தேன்''

எனச் சுந்தரரும்

''நாதன் தாள் வாழ்க; இறைவனடி வாழ்க''

என மாணிக்கவாசகரும்



திருக்குறட் கடவுள் வாழ்த்ததிகாரத்தில்

''வாலறிவன் நற்றாள்; தனக்குவமை யில்லாதான் தாள்''

எனத் திருவள்ளுவரும், கூறும் வாக்குகளால் இறைவன் திருவடி மாட்சி பற்றியும், அதனை அடைவார் பெறும்பயன் எம்மாட்டு என்பதனையும் நாம் அறியக் கிடக்கின்றது. இத் திறத் தனிமை இயல்பும், பழமை மிக்கவனுமாகிய இறைவன் தன்மையையும், பெருமையையும் சைவ நெறித் தத்துவங்களை உள்ளாகக் கொண்ட திருவாசகச் சிவபுராணத்திலே மணிவாசகர் தெளிவாக விளக்குகின்றார்.

உங்கள் வழிபடு கடவுளாகிய சிவன் ஏன் பல உருவங்களில் தோற்றமளிக்கின்றார் என்று வினவுவோர்க்கு, மணிவாசகர் போற்றித் திருவகவலில் விடையாக

''வேறு வேறுருவம் வேறு வேறியற்கையும்
நூறு நூறுயிர மியல்பின தாகி
ஏறுடை யீசன் இப்புவனியை உய்யக்
கூறுடைய மங்கையும் தானும் வந்தருளி''

என்று கூறுகின்றார்.

அர்த்தநாரீசுவரராகக் காட்சியளிப்பான் உயிர்களை உய்விக்கும்பொருட்டுஐந்தொழில்புரிகின்றான். இதனையே 'ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள் தருவாய், போக்குவாய் என்னைப் புகுவிப்பாய்' என்ற வாக்கியங்கள் மூலம் உயிரானது பெறும் பேரின்பம் பற்றிப் பேசுகின்றார் மணிவாசகர்.

நாம் முன்னரே கூறிய பழம் பொருளின் திருவடிகளை அடைவதற்கு உலக பந்த பாசங்களினின்றும் விடுபட வேண்டும். அது சும்மா இருந்தால் எமக்குக் கிட்டுமா? இல்லை. அதற்குத் திருவருட்டிறன் வேண்டும். அது கிட்டுவ தெங்ஙனம்? மணிவாசகரே காட்டுகின்றார். ''அவனருளாலே அவன்தாள் வணங்கித் தான் அதனைப் பெற வேண்டுமாம். அவ்வருளை நாம் பெற எமது முதியோர் கூறிய நான்கு முறைகளில் எம்மைச் செலுத்தி இறை

பெயரை உச்சரிப்போமேயாயின் அருள் தானே அருவியாக எம்மிடத்தூறும். இப்படியாக நாம் கொண்டது அருளாயின், பெற்றது வீடாகும்.

இறையருள்பெற்றோர் அவன்தோற்றத்தைத் தம்ஞானக் கண்களால் கண்டே தீருவர் என்பதை, அவனருள் பெற்று ஆனந்தக் களிப்பில் மூழ்கித் திரிந்த மணிவாசகர், வைத்த பொருளை எடுத்தது போல் எமக்குந் தாம் அருளிய கண்டபத்திலே படம் போட்டுக் காட்டுகின்றார். படத்தைப் பாருங்கள்! ''சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே'', ''எனைப் பெரிதும் ஆட்கொண்டென் பிறப்பறுத்த வினையிலியை அனைத்துலகும் தொழுந் தில்லை அம்பலத்தே கண்டேனே'', ''வேதங்கள் தொழு தேத்தும் விளங்கு தில்லை கண்டேன்'' என இறைவனைத் தான் கண்ட பேருண்மையை பின் சார்ந்தோரும் அறியும் பொருட்டும், அதனைச் சாரும் பொருட்டும் கூறிப் போந்தார்.

இங்கு முன்னரே ஓர் உண்மையை உங்கட்கு உரைக்க விழைகின்றேன். பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நம்மவர் மெய்ஞ்ஞான அளவில் கண்ட மிகப் பழமையான உண்மை, இன்றைய விஞ்ஞான அளவிற்கும் பொருத்த முடைத்தாக இருப்பதே அது.

ஒன்று நிகழ வேண்டின் இரு வேறுபட்ட பொருள்கள் வேண்டும் என விஞ்ஞானம் கூறுகின்றது. அவ்வளவின் வாயிலாகவே உலகமும் இயங்குகின்றதாம். இவ்வுண்மையையே மெய்யுணர்வு பெற்ற எமது மிகப் பழைய ஆன்றோர் ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்னர் தத்துவ வடிவில், உலக முதலாகிய பழம் பொருளை உமை ஒரு பாகனாக — சிவமும் சக்தியுமாகக் கண்டு வைத்து வழிபாடாற்றி வரலாயினர் என்றால் எம்மினத்தினது அறிவு வளர்ச்சியும் — சமயத்தின் தத்துவார்த்தமும் கூறும் தரத்ததோ! இதனாலன்றோ எமது சமயம் கண்ட நடராச உருவம் உலகிற் பெரும் கீர்த்தி பெற்றதுடன் ஒவ்வொரு நாட்டின் பழம் பொருட் காட்சிச் சாலைகளிலும் இடம்பெற்று இலங்கக் கூடியதாக இருக்கின்றது. இங்கு இவ்வெழில் உருவம் பற்றிச் சிறிது சிந்திப்போம்.



''உலகிலுள்ள கலைப்பொருட்களுள் நடராசத் திருவுருவமே தலையாயது'' என்பது உலகப் புகழ் பெற்ற பேரறிஞரும் கலைஞருமாகிய கலாநிதி ஆநந்தக் குமாரசுவாமி அவர்களின் கருத்து.

உலக உய்வின் பொருட்டே இறைவன் ஐந்தொழில்களைப் புரிகின்றான். இவ்வைந் தொழிலைக் குறிப்பதே நடராச வடிவம். அவற்றின் அசைவை — இயக்கத்தைக் குறிப்பதே திரு நடனமாகும். பேரின்பம் பெற்ற மணிவாசகப் பெருந்தகை ஐந்தொழில் இயக்கமாகிய நடராசத் தாண்டவத்தைத் ''தில்லை மூதூராடிய திருவடி பல்லுயிரெல்லாம் பயின்றனனாகி'' எனப் போற்றித் திருவகவலில் ஆரம்பித்து, இறைவனது திருவருட் திறத்தை — புகழ்ச்சி முறையை வியந்தோதியுள்ளார்.

நடராசப் பெருமானது கையிலுள்ள துடி படைத்தலையும், அமைத்த திருக்கரம் காத்தலையும், கையிலுள்ள அக்கினி அழித்தலையும், ஊன்றிய திருவடி மறைத்தலையும், தூக்கிய திருவடி அருளலையும் குறிப்பனவாம். அருள் பெற்ற ஆன்மா விடுதலை அடைவது உண்மை. இறைவனது இறுதியான தொழிலும் விடுதலை தருதலேயாம். தூக்கிய திருவடியின் மகிமை ஈண்டு இதனால் உணரற்பாலது.

''தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு''

எனும் பெரியோர் பாடல் மூலம் நடராச வடிவின் உண்மையை உணர்ந்து கொள்ளலாம். உயிர்கள் நாடும் இறுதியின்பத்தைப் பற்றியே இதன் இறுதி அடிகள் கூறுகின்றன. இத் திருவடியின் நிழலையே அடியார்கள் எல்லோரும் தேடினர்; கண்டும் கொண்டனர். ஆடிய பாதமும், பாடிய வேதங்கள் தேடிய பாதமும் இதுவேயாம்.

''மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்'' எனக் கூறிய மணிவாசகர், அப் பொன்னடியின் போகமே போகம் என்பதை உணர்த்தும் பொருட்டு ஆன்மாக்களுக்கு இறுதித் திருவெம்பாவையில் நினைவூட்டுகின்றார்.

# மாணிக்கவாசகர் பள்ளியில் படியாத மாபெரும் விஞ்ஞானியாவார்.

(பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம்)

பிரபஞ்சத்தைப்பற்றி ஐம்புலனறிவால் உணர்ந்த தோற்றப்பாடுகளேயும் அவற்றைப் பற்றிய செய்திகளேயும் மக்களாகிய எமக்கு அளிக்கப்பட்ட பகுத்தறிவு எனப்படும் ஆருவது அறிவைப் பயன்படுத்தி ஆராய்ந்து வகைப்படுத்தித் தருக்கரீதிப்படி வெளிப்படுத்தப்படும் உண்மைகளின் தொகுதியே விஞ்ஞானம் ஆகும். மெய்ஞ்ஞானமுயற்சிகளில் இன்னுமோர் அறிவு ஆற்றுகின்றது. அந்த ஏழாவது அறிவானது மேலானஅறிவுஎனப்படும். மேலான அறிவைஎமது சொந்த முயற்சியால்பெற இயலாது என்பதே சைவ சித்தாந்திகளின் கொள்கை. அதன்பெறுகைக்கு இறையருள்இன்றியமையாது வேண்டுமாம். சம்பந்தக் குழந்தை சிறு வயதிலேயே இறையருளேயும் அத்துடன்சிவஞானத்தையும்பெற்றுள்ளார். சொல்லவொண்ணுத் துயருற்ற பின்னரே வாகீசர் பெருமான் சிவ வொளியைக் கண்டார். மாணிக்கவாசகரின் சிவயாத்திரை வேருய் அமைந்துள்ளது. மனிதவாழ்க்கையானது நிலையற்

முன்பக்கத் தொடர்ச்சி

''போற்றி யருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி யருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி யெல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி யெல்லா உயிர்க்கும் ஈரும் இணையடிகள்
போற்றி மால் நான் முகனும் காணுத புண்டரிகம்
போற்றி யாமுய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம் மார்கழி நீராடேலோ ரெம்பாவாய்''

எனக் கூறிப் போற்றி வீடுபேறடைந்த மாணிக்கவாசகர் அடி ஒற்றி நாமும் நின்று அவ்வடி அடைவோமாக.

இறைவனடி வாழ்க.



றது என அவர் முதன் முதலாக உணர்த்தப்பட்டார். அடுத்ததாக அந்த மெய்க்குரவனின் அருளால் இறையுண்மையும் இறை மகிமையும் உணர்த்தப்பட்டன. இவ்வனுபவத்தைத் திருவாசகத்தில் தெளிவாகக் காண்கிறோம். அநுபேயமுறையானது சைவசித்தாந்த அளவை முறைகளுள் ஒன்ருகும். அநுபவவழியால் தெளிந்த மாணிக்கவாசகரின் அறிவு அன்பாக மாறித் திருக்கோவையாரில் பரிபூரணம் அடைகின்றது.

## அட்டமாசித்தி உபதேசம்

மதுரை மாநகரை விட்டு இரண்டாவது முறை திருப்பெருந்துறை நோக்கி ஏகின மணிவாசகர் தனக்குச் சிவகதி உடனடியாக கிடைக்கப் போகிறது என்ற முழுநம்பிக்கையுடன் சென்ருர். ஆனுல் அவரை ஆட்கொண்ட மெய்க்குரவரின் திருநோக்கு வேறு ''உன் காலம் இன்னும் வரவில்லை. நீ முதன் முதல் திருவண்ணுமலை மார்க்கமாகச் சென்று திருவுத்தரகோசமங்கையில் சின்ஞட்கள் தங்கி என்னை வழிபட்டு, வேறு பல தலங்களிலும் தரிசித்து, ஈற்றில் தில்லை அடைந்து அங்கு என்னுடன் இரண்டறக் கலக்கக் கடவாய்'' என்பதே சிவனின் ஆணை.

திருவுத்தரகோசமங்கைச் செலவைப் பற்றிக் கீர்த்தித் திருவகவலில் மணிவாசகர் கூறுகிருர்.

''உத்தரகோசமங்கையுள் இருந்து
வித்தக வேடங்காட்டிய இயல்பும்
.................... ........ ...
..........................................
பட்ட மங்கையிற் பாங்காய் இருந்தங்கு
அட்டமா சித்தி அருளிய அதுவும்''

என்னும் அடிகளால் அறுபத்து நான்கு முனிவர் அருந்தவம் ஆற்றித் திருவுருக் கொண்டு எழுந்தருளிய சிவனிடம் மெய்யறிவு பெற்ற உத்தரகோச மங்கையில் அதே பேறு தனக்கும் கிடைத்ததென்றும் முன்னொரு நாள் இயக்க மகளிர் அவர் தம் சாபகாலம் ஒழிந்து சிவனிடம் அட்டமா சித்தி உபதேசம் மீண்டும் பெற்ற அதே பட்ட மங்கலத்தில் தனக்கும் அட்டமா சித்திகள் வழங்கப்பட்டுள் என என்றும் உணர்த்தப் படுகின்றது. எதன் பொருட்டு மாணிக்க வாசகர் அட்டமா சித்திகளேப் பெறுமாறு கட்டளேயிடப்பட்டார் என்பது அச் சித்திகளின் வரைவிலக்கணத்திலிருந்து அறிய முடிகின்றது.

## பிராகாமிய சித்தி

அட்டமாசித்திகளைப் பற்றிய விரிவான விளக்கம் திருமூலர் திருமந்திரத்திலும், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்திலும் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. அட்டமாசித்திகளுள் ஒன்றாகிய பிராகாமிய சித்தி எமது கட்டுரைக்குப் பயன்படுகின்றது. அது பற்றிப் பரஞ்சோதி முனிவர் பின்வருமாறு கூறுகின்றார்.

'' விண்ணி லிரவிதன் னுடம்பின் வெயிலாலனைத்தும் விளக்குதல் போல்
மண்ணி லுளவாம் பொருள் பலவும் கால மூன்றும் வானத்தின்
கண்ணி லுளவாம் பொருளுந்தன் காயத் தொளியாலிருந்தறிதல்
எண்ணி லிதுவு மறை யொருசார் பிராகா மிய மென்றியம்புமால்''.

அதாவது ஞாயிற்றின் ஒளியைக் கொண்டு நாம் யாவையும் உணர்கிறதுபோல் பிராகாமியசித்தியென்பதைப் பெற்ற ஒருவர் அவர்தம் உடலொளியால் மூவுலகங்களிலும் முக்காலங்களிலும் உள்ள நிகழ்ச்சிகளை அறிய முடியுமாம்.

இப்பிராகாமிய சித்தியால் கிடைக்கப் பெற்ற அறிவானது சிறப்பாக ஞானிகளிடத்து, எவ்வாறு பயன்படுகிறது? இக்கேள்விக்கு இந் நூற்றுண்டின் விஞ்ஞானமேதாவி அல்பேட் எயின்ஸ்டைன் என்பவர் தக்க விடைஅளித்திருக்கிறார். எயின்ஸ்டைனின் கூற்று யாதெனில் உண்மையான விஞ்ஞானி மட்டுமே இறையுணர்வு பெறமுடியும் என்பதேயாம். அதாவது விஞ்ஞானியானவன் பிரபஞ்சத்தை ஆராய்ந்து, பிரபஞ்சத்தில் கண்ட நுண் ஒழுங்கு முறைகள் விதிகள் என்பவற்றிலிருந்து அப்பிரபஞ்சத்தின் ஆக்கலுக்கும், காத்தலுக்கும் அழித்தலுக்கும் நுண்ணறிவுள்ள கருத்தா ஒருவர் வேண்டும் என்று முடிவுசெய்கிறான். அத்துடன் நில்லாது அம் முடிவிலிருந்து வியப்பும், வியப்பிலிருந்து இறையன்பும் தோற்றுகின்றன. திருவாசகத்தின் பல பாகங்களில் இவ்வழி வந்த உள்ளக் கிளர்ச்சியைக் காண்கிறோம்.



## டார்வினும் மணிவாசகரும்

சென்ற நூற்றாண்டின் இடையில், ஆங்கிலேய விலங்கின விற்பன்னர் சர் சார்ள்ஸ்டார்வின் என்பவர் அவர் தம் 'உயிரினத்தின் சிறத்தல் கொள்கை' என்னும் நூலில் உயிரினங்களை ஒருயிர்க்கலனுள்ள உயிர் முதலாக மனிதன் ஈறாக, எல்லா உயிர்வகைகளையும் வரிசைப்படுத்தி எவ்வாறு உயிரினங்கள் படிப்படியாகச் சிறந்து, ஈற்றில் உன்னத மனித நிலையை அடைந்துள்ளன என மெய்ப்பித்துக் காட்டியுள்ளார். அதே கருத்தைத் திருவாசகத்தின் சிறப்புப்பாயிரமாக விளங்குகின்ற சிவபுராணத்தில், ஆனால் பரந்த நோக்குடன் காண்கிறோம்.

'' புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய்மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்''.

எனக் கதறுகிறார் மணிவாசகர்.

மணிவாசகப் பெருமான் மக்களிடத்தில் தன்னைவைத்து, இயங்கா வகைகளையும் இயங்கும் வகைகளையும் கூறி, அவ் வெல்லாப் பிறப்பும் தான் பிறந்திளைத்து விட்டார் எனத் தெரிவிக்கிறார். அவர் திருவாக்கு டார்வினின் கொள்கையுடன் ஒத்திருக்கிறது. ஆயினும் ஐயம் எழுகின்றது.

மேற் கூறியுள்ள திருப்பாடலில் 'கல்' 'தேவர்' 'பேய்' 'கணங்கள்' 'அசுரர் முதலிய சொற்கள் வருகின்றன. ஆனால் கல்லில் உயிரில்லையே, ஏனையவற்றை இம் மாநிலத்தில் நாம் காண்பதற்கில்லையே எனக் கேட்கலாம்.

'கல்லாய்' என்பது கல்லாதவரைக் குறிக்கிறது என்றும் தேவர் உலகம் அசுரர் உலகம் முதலியன உண்டு, மரணத்திற்குப் பின் எமது வினைகளுக்கேற்ப அவ்வுலகங்களை நாம் அடைகிறோம் என்றும் பலர் விளக்கம் காண்கின்றனர். அவ்வாறன்று, விஞ்ஞான ரீதிக்கு இணங்கும் பிறிதொரு விளக்கமும் உண்டு என்பதை ஈண்டு எடுத்துக் காட்ட நான் விரும்புகிறேன்.

மேற் கூறியுள்ள சொற்கள் ஆகு பெயர்களெனக் கொள்வோமாயின் விளக்கம் உடனே கிடைக்கின்றது. கல் என்பது, இங்கு இடவாகு பெயராகும். அது கல்லினுள் வசிக்கின்ற உயிரினத்தையே உணர்த்துகிறது, எனக்கூறின் பலர் வியப்புறக் கூடும். ஆனால் சென்ற ஆண்டின் ஈற்றில் அமெரிக்க நாட்டு விஞ்ஞானிகள் இருவர், புவிமீது மோதியுள்ள ஆகாயக் கற்களை ஆராயுங்காலே அக் கற்களின் துளைகளுள் இதுகாறும் நாம் கண்டறியாத வைரசு போன்ற மிக எளிய உயிரினம் ஒன்றை அவதானித்துள்ளனர். இச் செய்தியானது மணிவாசகரின் கருத்தை மெய்ப்பிக்கிறது மட்டுமன்றி அது வேற்று உலகங்களிலும், அதாவது அந்த ஆகாயக் கற்கள் உற்பத்தியான உலகங்களிலும், உயிரினங்கள் உள எனக் காட்டுகின்றதன்றோ?

இனி தேவர், பேய், அசுரர் என்னுஞ் சொற்களைப் பண்பாகு பெயர்களாகக் கருதுவோமாயின் மனிதனானவன் அவன்றன் வினைப் பயனால் பிறவிகள் எடுத்துத் தன்னைத் தேவராக உயர்த்திக் கொள்ளலாம் அல்லது பேயாகவும் அசுரராகவும் தாழ்த்திக் கொள்ளலாம் எனத் தெரிய வருகிறது. தினமும் எமது சமுதாயத்தில் ஆயிரக் கணக்கான பேய்களையும் அசுரர்களையும் மனித வடிவில் நாம் காண்கிறதில்லையா?

### மணிவாசகர் என்ற விஞ்ஞானி

ஆகவே திருப்பாடலில் முரண் யாதுமேயில்லை. மறு பிறப்பு உண்டென்றும் அம் மறு பிறப்பின் தரம் வினைப் பயனால் நிர்ணயிக்கப் படுகிறது என்றும் விஞ்ஞானி ஏற்றுக் கொள்வானாயின் மாணிக்கவாசகரின் திருவாக்கானது நவீன விஞ்ஞானத்துடன் பெரிதும் ஒத்திருக்கும்.

அதுபோலவே திருவாசகத்தின் வேறு பல பாடல்களில் விஞ்ஞானக் கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. திருவண்டப் பகுதியில் அணுவண்டங்களைப் பற்றிய பேருண்மைகளையும், போற்றித் திருவகவலில் கருவுற்பத்தியைப் பற்றிய விவரங்களையும் நாம் காண்கிறோம். அவை யாவும் முரணின்றி நவீன விஞ்ஞானத்துடன் ஒத்திருக்கின்றன.

எந்தக் கல்வி நிலையத்தில் மாணிக்கவாசகர் விஞ்ஞானம் பயின்றார்? எந்த நுணுக்குக் காட்டியைக் கொண்டு



ஆகாயக்கற்களின் துளைகளை அவர்பரிசோதித்தார்? அணுவைப் பிளந்து அதனுள்உறைகின்ற கூறுகளையும் சத்தியையும் அவர் வெளிப்படுத்தினாரா? வான வெளிப் பிரயாணம் செய்து அண்டங்களைத் தரிசித்தாரா? கருவுற்ற பெண்களின் உதரத்தைக் கீறி அங்கு உண்டாகியிருக்கின்ற கருக்களைப் பரிசோதித்தாரா? பிராகாமிய சித்தியே மாணிக்கவாசகரின் கண்டு பிடிப்புகளுக்குப் பயன்பட்டது.

### மெய்ஞ்ஞானியும் விஞ்ஞானியும்

கடைசியாக, மெய்ஞ் ஞானிக்கும் விஞ்ஞானிக்கும் உள்ள தொடர்பைக் கவனிப்போம். அதன் பொருட்டு ஒப்புமை ஒன்றைப் பயன் படுத்திக் கொள்வோம். ஓர் அறையிலுள்ள விளக்கைப் பூச்சியொன்று வட்டமிடுகிறது. அறையின் சுவர் மீது பூச்சியின் நிழல் விழுகின்றது. சுவரைப் பற்றியிருக்கின்ற 'பல்லி' ஒன்று அந் நிழலைப் பற்றிச் சில முடிவுகளுக்கு வருகின்றது. அந்தப் பல்லியே எமது விஞ்ஞானியாவான். பல்லியானது மாயை காரணமாகத் தடுமாறுகின்றது. ஆனால் அந்த மாயையின் பின்னணியில் உண்மை இருக்கிறது. அதே அறையில் இருக்கின்ற மனிதன் விளக்கையும், பூச்சியையும் நிழலையும் தொடர்பு படுத்தி உண்மையை உணர்கிறான். அவனே மெய்ஞ்ஞானி. எமது புலனறிவையும் பகுத்தறிவையும் இறைவன் அருளால் பெற்றிருக்கிறோம். ஆகவே அவை நன்முறையில் ஆற்றின் முழு உண்மையைப் பெற முடியாமற் போனாலும் உண்மையின் நிழலைக் காண முடிகின்றது. அவ்வளவில் விஞ்ஞானி மகிழ்ச்சி அடைகின்றான். உண்மையான விஞ்ஞானமானது மெய்ஞ்ஞானத்தின்கண் அடங்கவே வேண்டும்.

கண்டவிடத்து முகமாத்திரம் மலரும்படி சிநேகிப்பது சிநேகம் அன்று; அன்பால் உள்ளமும் மலரும்படி சிநேகிப்பதே சிநேகம் ஆகும்.

— நாவலர்.

## திருவாசகத் தேன் மருந்து!

— சி. பொன்னுத்தம்பி. —

*

அள்ளக்குறையா தமுதான ஊற்று! அடியவர் தம்
உள்ளத்தில் தித்தித் துவட்டா தினிக்கும் உயர்மருந்து!
வள்ளல் மணிவா சகனென்னும் ஞானி வடித்தளித்த
தெள்ளமுதாம்திரு வாசக மென்னுந் தேன்மருந்தே!

*

பக்தி பெருகும்; பாவம்நீ ருகும்! பருகுவோர் தம்
சித்தம் தெளிந்தெழில் தெய்வீக ஜோதி திகழ்ந்திடும்; விண்
முத்திக் கினிதான மோனங்கை கூட்டும் ஓர்மூலிகையாம்,
தித்திக்கும் இன்பத் திருவாசக மென்னுந் தேன்மருந்தே

*

உள்ளம் உருகி உணர்ச்சிப் பெருக்கால் உரை குளிர
வெள்ளம் போல் கண்ணீர் விட்டுவிட்டுள்ளே விம்மி; மனக்
கள்ளம் அறுத்தெமைக் கதி சேர வைக்கும், கனிமதுரத்
தெள்ளமுதாம்திரு வாசகமென்னுந் தேன்மருந்தே!

*

வஞ்சமனத்தை, வளர்காமப் பீடத்தை, மா கொடிய
நெஞ்சைத் திருத்தி, நெக்கு நெக்காய் உள் நெகிழ்ந் துருக்கி
பஞ்சைச்சிறியா ரிதயத்தையும் நன்கு பதப் படுத்தி
செஞ்சொற் கவிதை மழை பொங்க வைக்கும் தேன்மருந் தே!

*

கல்லாம் மரமாம் கனிவேசற் றில்லாதகா ரிரும்பாம்
பொல்லா மனத்தைப் புடமிட்டுக் காய்ச்சிப் புலர்த்திவிட
வல்ல மருந்தாம், மணிவாசகன் தந்தமா மருந்தே!
எல்லாரும் வாரீர் எழில்வா சகத்தேன ருந்துதற்கே!


## ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்!

| | | | |
|---|---|---|---|
| தெய்வீக வாழ்க்கைச் சங்க மலர் | | ... | 1–25 |
| ஸ்ரீ கதிரைமணி மாலை | (பரமஹம்சதாசன்) | ... | –50 |
| தீங்கனிச்சோலை | ,, | ... | 2–50 |
| அறிவுரைக்கதைகள் | (சுவாமி சிவானந்தர்) | ... | –65 |
| நானுர்? | ,, | ... | –25 |
| இளங்கோவின் கனவு | (செ. நடராசன்) | ... | 2–25 |
| ஆத்மநாதம் | (சுத்தானந்த பாரதியார்) | ... | 3–00 |
| பாட்டாளி பாட்டு | ,, | ... | 1–50 |
| கீதாயோகம் | ,, | ... | 2-50 |
| கூட்டு வழி பாடு | | ... | –30 |
| கந்தரனுபூதி | (பொழிப்புரையுடன்) | ... | –25 |
| மார்கழிப் பாடல் | | ... | –20 |
| நவராத்திரிப் பாடல் | | ... | –30 |
| நித்தியகருமவிதி | | ... | –25 |


## சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

இன்று வரை 16ம் ஆண்டுக்குரிய சந்தா அனுப்பியவர்களுக்கு உடனுக்குடனேயே ரசீது அனுப்பியுள்ளோம். அவர்களுக்கெல்லாம் எமது நன்றி உரித்தாகுக. இன்றுவரை சந்தா அனுப்பாதோர் உடனே அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

### ஆத்மஜோதி நிலையம் - நாவலப்பிட்டி.

[சிலோன்]

இந்தியாவிலுள்ள அன்பர்கள் வழக்கம் போல் R வீரசம்பு, சம்பு இன்டஸ்ட்ரீஸ், அரிசிப்பாளையம், சேலம்-9. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்து, அதை எமக்கும் தெரியப்படுத்த வேண்டுகின்றோம்.


## வாய்வு சூரணம்

உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீரணம், கை கால் அசதி, பிடிப்பு, பசியின்மை, வயிற்று வலி, பித்த மயக்கம், பித்த சூலை, புளியேப்பம், நெஞ்சுக் கடுப்பு முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரண சக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச் சிறந்த சூரணம்.

தபாற் செலவு உட்பட டின் ஒன்று 4 ரூபா 25 சதம்

[பத்தியமில்லை]

சம்பு இன்டஸ்ட்ரீஸ் — அரிசிப்பாளையம் சேலம் -9. (S.I.)

இலங்கையில் கிடைக்குமிடம்:-

ஆத்மஜோதி நிலையம் — நாவலப்பிட்டி.

மலாயாவில் கிடைக்குமிடம்:-

ஸ்ரீ கணபதி & கம்பெனி,
66, பெல்பீல்டு ஸ்ட்டிரிட், ஈப்போ P. O. [மலாயா.]

Registered at the G. P. O. as a Newspaper. M. L. 59/300

## சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்,

இன்றுடன் ஆத்மஜோதி பதினாறாவது ஆண்டின் ஐந்தாவது சுடர் உங்கள் கரங்களில் ஒளி வீசுகிறது. இப்புதிய ஆண்டின் சந்தாவை அன்பர்கள் மனமுவந்து உடனுக அனுப்பி ஜோதியின் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பீர்களாக.

இந்தியாவிலுள்ள அன்பர்கள் தமது சந்தாக்களை
வழக்கம் போல்

**R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ்,**
அரிசிப்பாளையம், சேலம்—9
என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

**ஆத்மஜோதி நிலையம்,**
நாவலப்பிட்டி — சிலோன்.
போன் — 353

## ஆத்மஜோதி மலர்

நீங்கள் எதிர்பார்த்திருந்த 'ஆத்மஜோதி மலர்' வெளிவந்து விட்டது. மலரினுள்ளே நாற்பதுக்கு மேற்பட்ட பெரியார்களின் கருத்துக்கள் உங்களுக்கு விருந்தாகின்றன. நாற்றைம்பது பக்கங்களிலும் ஆத்மீகக் கருத்துக்கள் சிறந்து விளங்குகின்றன. முகப்பில் ''என்னை எனக்கறிவித்த எங்கள் குருநாதன்'' மூவர்ணப் படத்துடன் காட்சி தருகின்றார். அவரை நினைப்பவர்க்கெல்லாம் பரகதி உண்டு.

விலை தபாற் செலவுட்பட 2—50 ஆகும்

**ஆத்மஜோதி நிலையம்,**
நாவலப்பிட்டி — சிலோன்.
போன் — 353

இப்பத்திரிகை ஆத்மஜோதி நிலையத்தாருக்காக ஆத்மஜோதி அச்சகத்தில் திரு. நா விநாயகமூர்த்தியால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. 14-3-64